
திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பயிற்சிக் கழகம்
## சிங்கப்பூர்

# திருமுறைப் பாடத்திட்டம்

நிலை ஐந்து

5



வெளியீடு

திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு,

சிங்கப்பூர்

2016

“திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்”

உ

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பயிற்சிக் கழகம்

**திருமுறைப் பாடத்திட்டம்**

## நிலை ஐந்து

**தொகுப்பாக்கம்**

டாக்டர். ஆ. ரா. சிவகுமாரன்

சிவ ரா. பழனிவேல்

**ஒலிப்பேழையில்பாடியவர்:**

தேவார இசைமணி

**சிவத்திரு C. பாலமுருகன் ஓதுவார்**

ஸ்ரீ செண்பக விநாயகர் கோயில்

வெளியீடு

திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு

சிங்கப்பூர்

2016

# உள்ளடக்கம்


1. துதிப் பாடல்கள் ...... 6

**1.1 நாயன்மார் துதி -** பேயன்ன ...... 6

**1.2 நாயன்மார் துதி -** தில்லைவாழ் ...... 6

2. திருமுறைப் பாடல்கள் ...... 6

**2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பிறையணி ...... 6

**2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பெருகிய ...... 6

**2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் -** அந்தமுமாதி ...... 7

**2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் -** விண்ணியன்மாடம் ...... 7

**2.5 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பூத்தேர்ந் ...... 8

**2.6 திருஞானசம்பந்தர் தேவாரம் -** குரும்பை ...... 8

**2.7 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பூவார்மலர்கொண் ...... 8

**2.8 திருஞானசம்பந்தர் தேவாரம் -** அல்லாடரவ ...... 8

**2.9 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நடைமரு ...... 9

**2.10 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தடமலி புகலியர் ...... 9

**2.11 திருஞானசம்பந்தர் தேவாரம் -** புலனைந்தும் ...... 9

**2.12 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மாதர்ம டப்பிடியும் ...... 10

**2.13 திருஞானசம்பந்தர் தேவாரம் -** ஏடுமலி ...... 10

**2.14 திருஞானசம்பந்தர் தேவாரம் -** ஆடலஅரவார் ...... 10

**2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மட்டிட்ட ...... 11

**2.16 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கானமர் ...... 11

**2.17 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பண்ணி னேர்மொழி ...... 11

**2.18 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பெயரெ னும்மிவை ...... 12

**2.19 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வரியமறையார் ...... 12

**2.20 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மரவம்பொழில்சூழ் ...... 12

**2.21 திருஞானசம்பந்தர் தேவாரம் -** எந்தை யீசனெம் ...... 13

**2.22 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கறையி னார்பொழில் ...... 13

**2.23 திருஞானசம்பந்தர் தேவாரம் -** என்ன புண்ணியஞ் ...... 13

**2.24 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மாதொர் கூறனை ...... 13

**2.25 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மண்ணின்நல் ...... 14

**2.26 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கருந்தடந் ...... 14

**2.27 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வீடலால ...... 14

**2.28 திருஞானசம்பந்தர் தேவாரம் -** போயநீர் ...... 15

**2.29 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கண்பொலி ...... 15

**2.30 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தண்வயல் ...... 15

**2.31 திருஞானசம்பந்தர் தேவாரம் -** ஏனவெயி ....................16
**2.32 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நிணந்தரு....................16
**2.33 திருநாவுக்கரசர் தேவாரம் -** மாதர்ப் பிறைக்கண்ணி ....................16
**2.34 திருநாவுக்கரசர் தேவாரம் -** வளர்மதிக்....................16
**2.35 திருநாவுக்கரசர் தேவாரம் -** சொன்மாலை ....................17
**2.36 திருநாவுக்கரசர் தேவாரம் -** வஞ்சித்தென் ....................17
**2.37 திருநாவுக்கரசர் தேவாரம் -** முத்துவிதான ....................17
**2.38 திருநாவுக்கரசர் தேவாரம் -** பாரூர்பௌவத்....................18
**2.39 திருநாவுக்கரசர் தேவாரம் -** எவரேனுந் ....................18
**2.40 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** நெய்யும் ....................18
**2.41 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** ஓவ ணம்மேல் ....................19
**2.42 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** இத்தனை....................19
**2.43 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பாடுவார்....................19
**2.44 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மற்றுப் பற்றெனக் ....................20
**2.45 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கோணி யபிறை ....................20
**2.46 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** ஆலந் தானுகந்....................21
**2.47 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மறைக ளாயின ....................21
**2.48 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** ஆழி யாற்கருள் ....................21
**2.49 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** அந்தியும் ....................22
**2.50 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மின்னெடுஞ்....................22
**2.51 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மடித்தாடும் ....................22
**2.52 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பாரூரும் அரவல்குல் ....................23
**2.53 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் -** கண்க ளிரண்டும் ....................23
**2.54 மாணிக்கவாசர் அருளிய திருவாசகம்-** திருவளர்....................23
**2.55 கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா -** அற்புதத் தெய்வம் ....................24
**2.56 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு -** ஆரார் வந்தார்....................24
**2.57 திருமுல நாயனார் அருளிய திருமந்திரம் -** சிவனொடொக்....................25
**2.58 திருஆலவாயுடையார் அருளியது -** மதிமலி....................25
**2.59 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் -** மண்ணி னில்....................25
3. திருமுறைப் பதிகங்கள்....................26
**3.01 திருஞானசம்பந்தர் தேவாரம் -** இடரினும்....................26
**3.02 திருஞானசம்பந்தர் தேவாரம் -** காதலாகி ....................28
**3.03 திருநாவுக்கரசர் தேவாரம் -** தலையே நீவணங்காய் ....................30
**3.04 திருநாவுக்கரசர் தேவாரம் -** வேற்றாகி ....................32
**3.05 சுந்தரர் தேவாரம் -** தில்லைவாழ் ....................35
**3.06 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் -** முத்திநெறி....................38

4. வாழ்த்துப் பாடல்கள் ........ 40
**4.1 வாழ்த்து -** வையம் நீடுக ........ 40
**4.2 வாழ்த்து -** மல்குக ........ 40
5. உரைநடை ........ 41
**5.1 கட்டுரைகள் -** ஆடவல்லான் ........ 41
**5.2 கட்டுரைகள் -** சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள் ........ 44
**5.3 கட்டுரைகள் -** சைவ சமய தத்துவங்கள் ........ 46
**5.4 கட்டுரைகள் -** திருமுறைகள் கூறும் அறவுரைகள் ........ 48
**5.5 திருத்தலங்கள் –** கச்சிஏகம்பம் (காஞ்சிபுரம்) ........ 53
**5.6 திருத்தலங்கள் –** ஆனைக்கா (திருவானைக்கா) ........ 55
**5.7 திருத்தலங்கள் –** ஆலங்காடு (திருவாலங்காடு) ........ 57
**5.8 திருவிழாக்கள் -** திருக் கார்த்திகை தீபத் திருவிழா ........ 58
**5.9 திருவிழாக்கள் -** பங்குனி உத்திர திருநாள் ........ 60
**5.10 நாயன்மார்கள் வரலாறு –** திருநீலகண்டர் ........ 63
**5.11 நாயன்மார்கள் வரலாறு –** மூர்த்தி நாயனார் ........ 65
**5.12 நாயன்மார்கள் வரலாறு –** அப்பூதியடிகள் நாயனார் ........ 67
**5.13 நாயன்மார்கள் வரலாறு –** அதிபத்த நாயனார் ........ 71
**5.14 நாயன்மார்கள் வரலாறு –** வாயிலார் நாயனார் ........ 73
**5.15 நாயன்மார்கள் வரலாறு –** கணநாத நாயனார் ........ 75

# 1. துதிப் பாடல்கள்

## 1.1 நாயன்மார் துதி - பேயன்ன

பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையே யன்றி
வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி அதீத வாழ்வில்
போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும் பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும் பேறு நான் பெற்றேனால்.

-சிவஞான சுவாமிகள்

## 1.2 நாயன்மார் துதி - தில்லைவாழ்

தில்லை வாழ் அந்தணரே முதலாக சீர்படைத்த
தொல்லையாதாம் திருத்தொண்டத்
தொகை அடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய
விரித்துரைத்த செல்வமலி குன்றத்தூர்
சேக்கிழார் அடிபோற்றி
தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கினாற் சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப்பயனாகப் பதி குன்றைவாழ்
சேக்கிழான் அடி சென்னி இருத்துவாம்.

-காஞ்சிபுராணம்

# 2. திருமுறைப் பாடல்கள்

## 2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் - பிறையணி

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 1-19-1

**பண்** : நட்டபாடை

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவ ளிணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழில்நிறை வயலணி கழுமலம் அமர்கன லுருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி கழல்தொழன் மருவுமே. 1.19.1

திருச்சிற்றம்பலம்

## 2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் - பெருகிய

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 1-19-11

**பண்** : நட்டபாடை

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

பெருகிய தமிழ்விர கினன்மலி பெயரவ னுறைபிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடலடை கழுமலம் உறைவிட மெனநனி
பெருகிய சிவனடி பரவிய பிணைமொழி யனவொரு பதுமுடன்
மருவிய மனமுடை யவர்மதி யுடையவர் விதியுடை யவர்களே. 1.19.11

திருச்சிற்றம்பலம்

## 2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் - அந்தமுமாதி

தலம்: திருவேட்களம்

திருமுறை: 1-39-1

**பண்** : **தக்கராகம்**

தாளம் :

திருச்சிற்றம்பலம்

அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்
ஆரழல் அங்கை அமர்ந்திலங்க
மந்தமுழவம் இயம்ப
மலைமகள் காணநின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலைகங்கை
தண்மதியம் மய லேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும்
வேட்கள நன்னகராரே.

திருச்சிற்றம்பலம்

## 2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் - விண்ணியன்மாடம்

தலம்: திருவேட்களம்

திருமுறை: 1-39-11

**பண்** : **தக்கராகம்**

தாளம் :

திருச்சிற்றம்பலம்

விண்ணியன்மாடம் விளங்கொளிவீதி
வெண்கொடியெங்கும் விரிந்திலங்க
நண்ணியசீர்வளர் காழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணின் நல்லாளொரு பாகமமர்ந்து
பேணியவேட்கள மேல்மொழிந்த
பண்ணியல்பாடல் வல்லார்கள்
பழியொடு பாவமிலாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.5 திருஞானசம்பந்தர் தேவாரம் - பூத்தேர்ந்

தலம்: திருவோத்தூர்

திருமுறை: 1-54-1

**பண் : பழந்தக்கராகம்**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாள் அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

திருச்சிற்றம்பலம்

## 2.6 திருஞானசம்பந்தர் தேவாரம் - குரும்பை

தலம்: திருவோத்தூர்

திருமுறை: 1-54-11

**பண் : தக்கராகம்**

தாளம் :

திருச்சிற்றம்பலம்

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

திருச்சிற்றம்பலம்

## 2.7 திருஞானசம்பந்தர் தேவாரம் - பூவார்மலர்கொண்

தலம்: திருவண்ணாமலை

திருமுறை: 1-69-1

**பண் : தக்கேசி**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்த அன்று மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.8 திருஞானசம்பந்தர் தேவாரம் - அல்லாடரவ

தலம்: திருவண்ணாமலை

திருமுறை: 1-69-11

**பண் : தக்கேசி**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

அல்லாடரவம் இயங்குஞ்சாரல் அண்ணா மலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞான சம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான பத்தும் இவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க மன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.9 திருஞானசம்பந்தர் தேவாரம் - நடைமரு

தலம்: **திருவிடைமருதூர்**

திருமுறை: 1-121-1

பண் : வியாழக்குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளம் அமர்ர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே.

திருச்சிற்றம்பலம்

## 2.10 திருஞானசம்பந்தர் தேவாரம் - தடமலி புகலியர்

தலம்: **திருவிடைமருதூர்**

திருமுறை: 1-121-11

பண் : வியாழக்குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழில்இடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே.

திருச்சிற்றம்பலம்

## 2.11 திருஞானசம்பந்தர் தேவாரம் - புலனைந்தும்

தலம்: திருவையாறு

திருமுறை: 1-130-1

பண் : மேகராகக்குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்

றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே
திருச்சிற்றம்பலம்

## 2.12 திருஞானசம்பந்தர் தேவாரம் - மாதர்ம டப்பிடியும்

தலம்: **திருத்தருமபுரம்**

திருமுறை: 1-136-1

பண் : யாழ்மூரி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்
மாதர்ம டப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூத இனப்படை நின் றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறைவண்டறை
யெழில் பொழில் குயில் பயில்தருமபு ரம்பதியே
திருச்சிற்றம்பலம்

## 2.13 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஏடுமலி

தலம்: **திருநள்ளாறு**

திருமுறை: 2-33-1

பண் : இந்தளம்

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்
ஏடுமலி கொன்றையர விந்து இள வன்னி
மாடவல செஞ்சடையெ மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே.
திருச்சிற்றம்பலம்

## 2.14 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஆடலஅரவார்

தலம்: **திருநள்ளாறு**

திருமுறை: 2-33-11

பண் : இந்தளம்

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்
ஆடலஅரவார்சடையன் ஆயிழைதன் னோடும்

நாடுமலி வெய்திட விருந்தவன் நள்ளாற்றை
மாடமலி காழிவளர் பந்தனது செஞ்சொல்
பாடலுடை யாரையடை யாபழிகள் நோயே.

திருச்சிற்றம்பலம்

## 2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் - மட்டிட்ட

தலம்: திருமயிலாப்பூர்

திருமுறை: 2-47-1

பண் : சீகாமரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

## 2.16 திருஞானசம்பந்தர் தேவாரம் - கானமர்

தலம்: திருமயிலாப்பூர்

திருமுறை: 2-47-11

பண் : சீகாமரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞான சம்பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.17 திருஞானசம்பந்தர் தேவாரம் - பண்ணி னேர்மொழி

தலம்: சீகாழி

திருமுறை: 2-49-1

பண் : சீகாமரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய வோசை நாடொறுங்
கண்ணிந் நேரயலே பொலியுங் கடற்காழிப்
பெண்ணின் நேரொரு பங்கு டைப்பெரு
மானை யெம்பெரு மானென் றென்றுன்னும்
அண்ண லாரடியார் அருளாலுங் குறைவிலரே.

திருச்சிற்றம்பலம்

## 2.18 திருஞானசம்பந்தர் தேவாரம் - பெயரெ னும்மிவை

தலம்: **சீகாழி**

திருமுறை: 2-49-11

பண் : சீகாமரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பெயரெ னும்மிவை பன்னி ரண்டினும்
உண்டெ னப்பெயர் பெற்ற வூர்திகழ்
கயலுலாம் வயல்சூழ்ந் தழகார் கலிக்காழி
நயன டன்கழ லேத்தி வாழ்த்திய
ஞான சம்பந்தன் செந்த மிழுரை
உயருமா மொழிவார் உலகத் துயர்ந்தாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.19 திருஞானசம்பந்தர் தேவாரம் - வரியமறையார்

தலம்: திருக்கடவூர் மயானம்

திருமுறை: 2-80-1

பண் : காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

வரிய மறையார் பிறையார் மலையோர்சிலையா வணக்கி
எரியமதில்கள் எய்தார் எறியுமுசலம் உடையார்
கரியமிடறும் உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவார் அவரெம்பெருமான் அடிகளே.

திருச்சிற்றம்பலம்

## 2.20 திருஞானசம்பந்தர் தேவாரம் - மரவம்பொழில்சூழ்

தலம்: திருக்கடவூர் மயானம்

திருமுறை: 2-80-11

பண் : காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மரவம்பொழில்சூழ் கடவூர் மன்னுமயானம் அமர்ந்த
அரவம் அசைத்த பெருமான் அகல அறிய லாகப்
பரவுமுறையே பயிலும் பந்தன்செஞ்சொல் மாலை
இரவும்பகலும் பரவி நினைவார்வினைகள் இலரே.

திருச்சிற்றம்பலம்

## 2.21 திருஞானசம்பந்தர் தேவாரம் - எந்தை யீசனெம்

தலம்: திருநெல்வாயிலரத்துறை

திருமுறை: 2-90-1

பண் : பியந்தைக்காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

திருச்சிற்றம்பலம்

## 2.22 திருஞானசம்பந்தர் தேவாரம் - கறையி னார்பொழில்

தலம்: திருநெல்வாயிலரத்துறை

திருமுறை: 2-90-11

பண் : பியந்தைக்காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை அடிகள்தம் அருளை
முறைமை யாற்சொன்ன பாடல் மொழியும் மாந்தர்தம் வினைபோய்ப்
பறையும் ஐயுற வில்லைப் பாட்டிவை பத்தும்வல் லார்க்கே.

திருச்சிற்றம்பலம்

## 2.23 திருஞானசம்பந்தர் தேவாரம் - என்ன புண்ணியஞ்

தலம்: திருவலஞ்சுழி

திருமுறை: 2-106-1

பண் : நட்டராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

திருச்சிற்றம்பலம்

## 2.24 திருஞானசம்பந்தர் தேவாரம் - மாதொர் கூறனை

தலம்: திருவலஞ்சுழி

திருமுறை: 2-106-11

பண் : நட்டராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே.

திருச்சிற்றம்பலம்

## 2.25 திருஞானசம்பந்தர் தேவாரம் - மண்ணின்நல்

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 3-24-1

பண் : கொல்லி

தாளம்: மிஸ்ர சாபு

திருச்சிற்றம்பலம்

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்

## 2.26 திருஞானசம்பந்தர் தேவாரம் - கருந்தடந்

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 3-24-11

பண் : கொல்லி

தாளம்: மிஸ்ர சாபு

திருச்சிற்றம்பலம்

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே.

திருச்சிற்றம்பலம்

## 2.27 திருஞானசம்பந்தர் தேவாரம் - வீடலால

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-52-1

பண் : கௌசிகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

திருச்சிற்றம்பலம்

## 2.28 திருஞானசம்பந்தர் தேவாரம் - போயநீர்

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-52-11

பண் : கௌசிகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண்டு ஆலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே.

திருச்சிற்றம்பலம்

## 2.29 திருஞானசம்பந்தர் தேவாரம் - கண்பொலி

தலம்: திருப்பனந்தாள்

திருமுறை: 3-62-1

பண் : பஞ்சமம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை ஈச்சரமே.

திருச்சிற்றம்பலம்

## 2.30 திருஞானசம்பந்தர் தேவாரம் - தண்வயல்

தலம்: திருப்பனந்தாள்

திருமுறை: 3-62-11

பண் : பஞ்சமம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

தண்வயல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரத்துக்
கண்ணய லேபிறையான் அவன் றன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழான் மிகு ஞானசம் பந்தன்நல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்

## 2.31 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஏனவெயி

தலம்: திருமயிலாடுதுறை

திருமுறை: 3-70-1

பண் : சாதாரி

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

ஏனவெயி றாடரவொ டென்புவரி யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை யதளுடைய படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்கள் ஆகுதியின் மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடுதுறையே.

திருச்சிற்றம்பலம்

## 2.32 திருஞானசம்பந்தர் தேவாரம் - நிணந்தரு

தலம்: திருமயிலாடுதுறை

திருமுறை: 3-70-11

பண் : சாதாரி

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

நிணந்தரு மயானநில வானமதி யாததொரு சூலமொடுபேய்க்
கணந்தொழு கபாலிகழ லேத்திமிக வாய்த்ததொரு காதன்மையினால்
மணந்தண்மலி காழிமறை ஞானசம் பந்தன்மயி லாடுதுறையைப்
புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய் வார்பெறுவர் பொன்னுலகமே.

திருச்சிற்றம்பலம்

## 2.33 திருநாவுக்கரசர் தேவாரம் - மாதர்ப் பிறைக்கண்ணி

தலம்: திருவையாறு

திருமுறை: 4-3-1

பண் : காந்தாரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

திருச்சிற்றம்பலம்

## 2.34 திருநாவுக்கரசர் தேவாரம் - வளர்மதிக்

தலம்: திருக்கச்சியேகம்பம்

திருமுறை: 4-7-11

பண் : காந்தாரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிற் கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

திருச்சிற்றம்பலம்

## 2.35 திருநாவுக்கரசர் தேவாரம் - சொன்மாலை

தலம்: திருப்பழனம்

திருமுறை: 4-12-1

பண் : பழந்தக்கராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன் என் புதுநலமுண் டிகழ்வானோ

திருச்சிற்றம்பலம்

## 2.36 திருநாவுக்கரசர் தேவாரம் - வஞ்சித்தென்

தலம்: திருப்பழனம்

திருமுறை: 4-12-10

பண் : பழந்தக்கராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

திருச்சிற்றம்பலம்

## 2.37 திருநாவுக்கரசர் தேவாரம் - முத்துவிதான

தலம்: திருவாரூர்

திருமுறை: 4-21-1

பண் : குறிஞ்சி

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

முத்துவிதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்

திருச்சிற்றம்பலம்

## 2.38 திருநாவுக்கரசர் தேவாரம் - பாரூர்பௌவத்

தலம்: திருவாரூர்

திருமுறை: 4-21-10

பண் : குறிஞ்சி

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

பாரூர்பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரூரன் தன் ஆதிரைநாளால் அதுவண்ணம்.

திருச்சிற்றம்பலம்

## 2.39 திருநாவுக்கரசர் தேவாரம் - எவரேனுந்

தலம்: திருக்கன்றாப்பூர்

திருமுறை: 6-61-3

ராகம்:

தாளம்:

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
  திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
  உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
  இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
  கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

திருச்சிற்றம்பலம்

## 2.40 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - நெய்யும்

தலம்: திருவோணகாந்தன்தளி

திருமுறை: 7-5-1

பண்: இந்தளம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழல டிதொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே

திருச்சிற்றம்பலம்

## 2.41 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஓவ ணம்மேல்

தலம்: திருவோணகாந்தன்தளி

திருமுறை: 7-5-10

பண்: இந்தளம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

ஓவ ணமேல் எருதொன் றேறும்
ஓண காந்தன் தளியு ளார்தாம்
ஆவ ணஞ்செய் தாளுங் கொண்டு
வரைது கிலொடு பட்டு வீக்கிக்
கோவ ணமேற் கொண்ட வேடம்
கோவை யாகஆ ரூரன் சொன்ன
பாவ ணத்தமிழ் பத்தும்வல் லார்க்குப்
பறையுந் தாஞ்செய்த பாவந் தானே.

திருச்சிற்றம்பலம்

## 2.42 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - இத்தனை

தலம்: திருக்குருகாவூர் வெள்ளடை

திருமுறை: 7-29-1

பண்: நட்டராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

இத்தனை யாமாற்றை யறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே

திருச்சிற்றம்பலம்

## 2.43 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பாடுவார்

தலம்: திருக்குருகாவூர் வெள்ளடை

திருமுறை: 7-29-3

பண்: நட்டராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

திருச்சிற்றம்பலம்

## 2.44 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மற்றுப் பற்றெனக்

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி

திருமுறை: 7-48-1

பண்: பழம் பஞ்சுரம்

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே

திருச்சிற்றம்பலம்

## 2.45 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கோணி யபிறை

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி

திருமுறை: 7-48-10

பண்: பழம் பஞ்சுரம்

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

கோணி யபிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை
சொல்லு வார்க்கில்லை துன்பமே

திருச்சிற்றம்பலம்

## 2.46 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஆலந் தானுகந்

தலம்: திருக்கச்சி ஏகம்பம்

திருமுறை: 7-61-1

பண்: தக்கேசி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே

திருச்சிற்றம்பலம்

## 2.47 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மறைக ளாயின

தலம்: திருவானைக்கா

திருமுறை: 7-75-1

பண்: காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மறைக ளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத் திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே

திருச்சிற்றம்பலம்

## 2.48 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஆழி யாற்கருள்

தலம்: திருவானைக்கா

திருமுறை: 7-75-10

பண்: காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

ஆழி யாற்கருள் ஆனைக் காவுடை ஆதிபொன் னடியின்
நீழ லேசர ணாக நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் றொண்டன் வண்டமிழ் மாலைவல் லார்போய்
ஏழு மாபிறப் பற்று எம்மையும் ஆளுடை யாரே

திருச்சிற்றம்பலம்

## 2.49 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - அந்தியும்

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-83-1

பண்: புறநீர்மை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்(கு)
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே

திருச்சிற்றம்பலம்

## 2.50 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மின்னெடுஞ்

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-83-10

பண்: புறநீர்மை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலர் கோன்ஊரன்
பன்னெடுஞ் சொன்மலர்கொண் டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே

திருச்சிற்றம்பலம்

## 2.51 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மடித்தாடும்

தலம்: கோயில்

திருமுறை: 7-90-1

பண்: குறிஞ்சி

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும்
எரிஅகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே

திருச்சிற்றம்பலம்

## 2.52 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பாரூரும் அரவல்குல்

தலம்: கோயில்

திருமுறை: 7-90-10

பண்: குறிஞ்சி

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

பாரூரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே

திருச்சிற்றம்பலம்

## 2.53 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - கண்க ளிரண்டும்

தலம்: கோயில்

திருமுறை: 8-49-1

ராகம்: மோகனம்

தாளம்: ஆதி

திருப்படையாட்சி

திருச்சிற்றம்பலம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வில்என் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடும் மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே .

திருச்சிற்றம்பலம்

## 2.54 மாணிக்கவாசர் அருளிய திருவாசகம்- திருவளர்

தலம்: கோயில்

திருமுறை: 8 (திருக்கோவையார் )-1-1

ராகம்:

தாளம்:

திருக்கோவையார்-இயற்கைப் புணர்ச்சி

திருச்சிற்றம்பலம்

திருவளர் தாமரை சீர்வளர்
காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி
னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே
திருச்சிற்றம்பலம்

## 2.55 கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா - அற்புதத் தெய்வம்

**தலம்**: **கங்கைகொண்ட சோளேச்சரம்**

**திருமுறை**: 9-13-3

**இராகம் ஆனந்த பைரவி**

**தாளம் ஆதி**

திருச்சிற்றம்பலம்
அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே
திருச்சிற்றம்பலம்

## 2.56 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு - ஆரார் வந்தார்

தலம்: கோயில்

**திருமுறை**: 9-29-12

**இராகம்**: **ஆனந்த பைரவி**

**தாளம்**: **ஆதி**

திருச்சிற்றம்பலம்
ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## 2.57 திருமூல நாயனார் அருளிய திருமந்திரம் - சிவனொடொக்

**திருமுறை**: 10-1-1

**இராகம்**:

**தாளம்**:

திருச்சிற்றம்பலம்
சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே
திருச்சிற்றம்பலம்

## 2.58 திருஆலவாயுடையார் அருளியது - மதிமலி

**திருமுறை**: 11-1-1

**இராகம்**:

**தாளம்**:

**திருமுகப்பாசுரம்**

திருச்சிற்றம்பலம்
மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்

கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்

காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.
திருச்சிற்றம்பலம்

## 2.59 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - மண்ணி னில்

திருமுறை: 12-1087

ராகம்: மத்தியமாவதி

**தாளம்**:

திருச்சிற்றம்பலம்
மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்

கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகஎன வுரைப்பார்
திருச்சிற்றம்பலம்

# 3. திருமுறைப் பதிகங்கள்

## 3.01 திருஞானசம்பந்தர் தேவாரம் - இடரினும்

தலம்: பொது_திரு ஆவடுதுறை

திருமுறை: 3-04

பண்: காந்தார பஞ்சமம்

தாளம்: ஆதி

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தர் பட்டீச்சுரத்திலிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கியவராய்த் திருவாவடுதுறை வந்தடைந்தார். அதுபோது சிவபாத இருதயர், தான் வேள்வி செய்தற்கு ஏற்ற காலம் இதுவாகும். அதற்குப் பொருள் வேண்டுமென ஞானசம்பந்தரிடம் தெரிவித்தார். திருஞானசம்பந்தர் தந்தையாருக்கு அளிக்கப் பொருள் இல்லையே என வருந்தியவராய் `இடரினும் தளரினும்` என்ற திருப்பதிகத்தால் இறைவனிடம் விண்ணப்பித்தார். சிவபூதம் ஒன்று ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழி ஒன்றை ஆலயத்தில் மாசிலாமணியீசர் சந்நிதியில் உள்ள பீடத்தில் வைத்து `இப்பொற்கிழி எடுக்க எடுக்கக் குறையாத உலவாக் கிழி, இறைவர் இக்கிழியை உமக்கு வழங்குமாறு அளித்துள்ளார்` எனக் கூறி மறைந்தது. ஆளுடைய பிள்ளையார் உலவாக் கிழியைத் தலைமேற் கொண்டு போற்றி அதனைத் தந்தையார் கையில் கொடுத்து, இக்கிழியின் பொன்னைக் கொண்டு தந்தையாரையும் கழுமலத்தில் உள்ள ஏனைய அந்தணர்களையும் நல் வேள்விகள் (சிவபெருமானை முழுமுதல் பொருளாக வைத்து செய்யக்கூடிய வேள்விகள்) பலவும், செய்யுமாறு கூறி வழியனுப்பி வைத்தார்.

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 01

வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேன்அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 02

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 03

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதுஎன்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதிள் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 04

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 05

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதுஎன்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 06

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதுஎன்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 07

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழலலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 08

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மலர் அடியலால் உரையாதுஎன்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரிது ஆயவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 09

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் அடியலால் அரற்றாதுஎன்நாப்
புத்தரும் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 10

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை எம்இறையை
நலம்மிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

## 3.02 திருஞானசம்பந்தர் தேவாரம் - காதலாகி

தலம்: திருநல்லூர் பெருமணம்

திருமுறை: 3-49

பண்: கௌசிகம்

தாளம்: ஆதி

பதிக வரலாறு:
திருஞானசம்பந்தப் பெருமான் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு தோணிபுரம்(சீகாழி) வந்த சமயத்தில் பெரியோர்களின் விருப்பப்படி நல்லூர் பெருமணம் என்ற கோயிலில் திருஞானசம்பந்தருக்கு திருமணம் நடைபெற, இறைவன் திருமுன் நின்று `கல்லூர்ப் பெருமணம் வேண்டா` எனத் தொடங்கித் திருப்பதிகம் அருளிச் செய்தார். அப்போது சிவபெருமான் தூய சோதிப் பிழம்பாய்த் தோன்றி நின்று `ஞானசம்பந்தனே நீயும் நின் மனைவியும் திருமணம் காணவந்தோரும் இச்சோதியினுள்ளே வந்து சேர்மின்` எனக்கூறி அதனுள்ளே புகுதற்கு வாயிலையும் காட்டி நின்றார். திருஞானசம்பந்தர் `இம்மணவிழாக்காண வந்தோர் அனைவரும் இச்சோதியுட் புகுமின்` எனக்கூறி `காதலாகி` எனத்தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் அருளி நின்றார். ஆளுடைய பிள்ளையாரைத் தொடர்ந்து வந்த அடியவர், பரிசனங்கள், அருந்தவ முனிவர்கள் முதலிய அனைவரும் சிவசோதியுள் புகுந்தபின்

திருஞானசம்பந்தர் தம் காதலியாருடன் இறைவனது எழில்வளர் சோதியை வலம்வந்து அதனுள்ளே புகுந்து பெருமானோடு ஒன்றி உடனானார்.

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 01

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 02

நெக்குள் ஆர்வம் மிகப்பெருகிந் நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவர் ஆத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. 03

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல்லார் தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. 04

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 05

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. 06

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயின ராயின் உருத்திரர்
விரவியே புகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. 07

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை

நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. 08

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந்தான் முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. 09

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்தவல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

## 3.03 திருநாவுக்கரசர் தேவாரம் - தலையே நீவணங்காய்

தலம்: திருப்பூந்துருத்தி

திருமுறை: 4-9

பண் : சாதாரி

தாளம்: ரூபகம்

திரு அங்கமாலை

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் சிவ சின்னங்கள் அணிந்து உழவாரப்படை ஏந்தி, திருப்பூந்துருத்தியில் திங்களும் ஞாயிறும் தோயும் உயர்வானதொரு திருமடத்தை அமைத்து எம்பெருமானை போற்றி திருத்தொண்டு செய்து தங்கியிருக்கும் காலத்தில் இத்திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

மேலான இந்த மானிடப் பிறப்பை எடுத்ததன் நோக்கம், பரம்பொருளான சிவபெருமானை அடைவதற்கே ஆகும். நம்முடைய கருவிகரணங்கள் யாவும் இறை வணக்கத்திற்கே பயன்படல் வேண்டும். அப்பொழுதுதான் ஆணவ மலம் நீங்கப்பெற்று எம்பெருமானின் திருவடியை அடைய முடியும்.

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் தலை மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலிதேரும் தலைவனைத் தலையே நீ வணங்காய். 01

கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை

எண்தோள் வீசிநின்றாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ. 02

செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ 03

மூக்கே நீ முரலாய் முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய். 04

வாயே வாழ்த்து கண்டாய் மத யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும்பிரான் தன்னை வாயே வாழ்த்துகண்டாய். 05

நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய். 06

கைகாள் கூப்பித்தொழீர் கடி மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர். 07

ஆக்கையால் பயனென் அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையால் பயனென். 08

கால்களால் பயனென் கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயனென். 09

உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ. 10

இறுமாந்து இருப்பன்கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்கு இறுமாந்து இருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

## 3.04 திருநாவுக்கரசர் தேவாரம் - வேற்றாகி

தலம்: திருக்கயிலாயம்

திருமுறை: 6-55

ராகம்: அரிகாம்போதி

தாளம்: ஆதி/சந்த தாளம்

போற்றித் திருத்தாண்டகம்

பதிக வரலாறு:

திருக்காளத்திமலையில் இறைவனைத் தொழுத திருநாவுக்கரசருக்குத் திருக்கயிலாய தரிசனம் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அங்கிருந்து காடொடு நாடும் மலையும் கைதொழுது போற்றிச்சென்று திருக்கயிலாயம் சென்றதும், வான் ஒலியாய தம் பெருவாக்கினால், `இப்பொய்கையில் மூழ்கி, நாம் திருக்கயிலையில் வீற்றிருக்கும் அம்முறையை, குற்றம் இல்லாத சிறப்புடைய திருவையாற்றிலே சென்று காண்பாயாக!` என்று பெருமானாரும் பணித்தருளினார். மேற்கூறியவாறு அருளிய ஆனேற்றினை ஊர்தியாக உடைய சிவபெருமானின் திருவருளைத் தலைமேல் கொண்டு, எழுந்து வணங்கி, `வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி` எனத் தொடங்கும் திருப்பதிகங்கொண்டு விருப்புடன் வழிபட்டுத் திருவருள் வன்மை பெற்ற நாயனார், இறைவரின் திருவைந்தெழுத்தை ஓதியவாறு, இறைவர் தம் ஆணைப்படி புனித நீர்ப் பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் ஒரு பொய்கையில் தோன்றி திருக்கயிலைக் காட்சி கண்டு நாயனார் ஆடினார், பாடினார், அழுதார். அத்தொண்டருக்கு அங்கு அதுபொழுது நிகழ்ந்தனவாகிய வியத்தகு மெய்ப் பாடுகளைச் சொல்ல வல்லார் யார்? எவரும் இலர் என்று சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் புகழ்கிறார்.

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 01

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 02

மருவார் புரமூன்று எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி. 03

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென் தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத் தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 04

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி ஆன நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 05

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 06

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 07

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத்து அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி

கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 08

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழும் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 09

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின்சொல் கேட்டாய் போற்றி
பண்டே என்சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

## 3.05 சுந்தரர் தேவாரம் - தில்லைவாழ்

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-39

பண் : கொல்லிக் கௌவாணம்

தாளம்: ஜம்பை

திருத்தொண்டத்தொகை

பதிக வரலாறு:
திருவாரூரில் அடியவர் திருக்கூட்டத்தை புறத்தே வணங்காது செல்கின்ற நம்பியாரூரரும், திருவாரூர்ப் பெருமானும் புறகு என்று திருவருளைப் பெற்ற

விறன்மிண்ட நாயனார் சொல்ல, சுந்தரமூர்த்தி சுவாமிகள் (நம்பியாரூரர்) தேவாசிரிய மண்டபத்திலே அடியார்கள் பலர் கூடியிருப்பதைக் கண்டு இவர்களுக்கெல்லாம் நான் அடியவனாகும் நாள் எந்நாளோ? என்று எண்ணிக்கொண்டே இறைவன் திருமுன் சென்றார். தியாகராசப் பெருமான் நம்பியாரூரர் கருத்தறிந்து அவர் முன் காட்சி வழங்கி தம் திருவாயால் ``தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்`` என்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படிப் பணித்தருளி மறைந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்தை அடைந்து அங்கு எழுந்தருளியிருந்த அடியவர்களை வணங்கி அடியார் பெருமையை விளக்கித் திருத்தொண்டத்தொகை என்னும் அற்புதத் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

குறிப்பு: அன்பர்கள் இத்திருப்பதிகத்தை ஓதும்போது, முடிந்தவரை நின்று கொண்டு ஓதவும்.

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 01

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக் கஞ்சாறன்
எஞ்சாத வாள்தாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 02

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 03

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்

ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 04

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 05

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற்கு அடியேன்
கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 06

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 07

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 08

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி

பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 09

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

திருச்சிற்றம்பலம்

## 3.06 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - முத்திநெறி

தலம்: திருத்தில்லை

திருமுறை: 8-51

ராகம்: மோகனம்

தாளம்: ஆதி

### அச்சோப் பதிகம் – (அனுபவவழி அறியாமை)

பதிகச் சிறப்பு:

மணிவாசகப் பெருமான் இத்திருப்பதிகம் முழுவதும், இறைவனின் பெருங்கருணையை வியந்து தனக்கு இறைவன் அருளியவற்றை அளவில்லாத ஆனந்தத்துடன் அருளியிருக்கிறார்.

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 01

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்

குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 02

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 03

மண்ணதனில் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட்டு என்னையும்தன்
சுண்ணவெண்ணீறு அணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 04

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல் என்றருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 05

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத்து எனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்து
அந்தம் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 06

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனும் தாழுருவி
உய்யும்நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 07

சாதல் பிறப்பென்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக்கு அணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொரு கூறுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதி எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 08

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து
அம்மை எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 09

திருச்சிற்றம்பலம்

# 4. வாழ்த்துப் பாடல்கள்

## 4.1 வாழ்த்து - வையம் நீடுக

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

-பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

## 4.2 வாழ்த்து - மல்குக

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உயிர்கட் கெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

-திருவிளையாடற் புராணம்.

திருச்சிற்றம்பலம்

# 5. உரைநடை

## 5.1 கட்டுரைகள் - ஆடவல்லான்

சிவன் – ஆசிரியர் ப. முத்துகுமாரசுவாமி

சிவபெருமான் கொணடருளிய மூர்த்தங்களுள் நடராஜ மூர்த்தம் புகழ் பெற்றது. குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போல் மேனி, பால் வெண்ணீறு ஆகியவற்றோடு அவன் ஆடுகின்ற எழிலோ அத்துணையும் காணக் கிடைக்கா இன்பம். இந்தத் திருவுரு வடிவம் தான் நடராஜர். எனவேதான், மூர்த்தங்களுள் உயர்ந்தது, சிறந்தது நடராஜ மூர்த்தம் என்று கூறுகின்றனர் சைவப் பெருமக்கள்.

இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, அவற்றின் பக்குவத்திற்கு ஏற்ற போகம், யோகம், வேகம் என்னும் மூவகைத் திருவடிவங்களைத் தாங்கி வந்து அவற்றை ஆட்கொள்கிறான்.

இம்மூவகை திருவடிவங்களைத் தன்னுள் தாங்கி வந்து மேலான் மூர்த்தியாக அம்பலத்தில் ஆடுகின்ற ஆடவல்லான்தான் நடராசப் பெருமான். ஐந்தொழீல்களோடு ஞானமயமான் சிதாகாசத்தின் இயல்பினையும் அறிவித்தருளும் மேன்மையுறு சிவமூர்த்தமே நடராஜ மூர்த்தம்.

உடலை இயக்கும் இதயத்துடிப்புப் போல, உலக இயக்கத்திற்கு நடராசப் பெருமானது தாண்டவம் துணை செய்கிறது. இத்திருநடன இயக்கத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்து காட்டுகிறார் எம்பெருமான் என்பது ஓங்கு புகழ் சைவ நெறி கூறும் உண்மை.

இத்தாண்டவத்திற்குரிய சிறப்புத்தலம், சிதம்பரம். பதஞ்சலி,வியாக்ரபாதர் ஆகிய முனிவர்களுக்காக இந்நடனத்தை இந்நிலவுலகில் பெருமான் தில்லையில் செய்தருளினார் என்பது புராண வரலாறு. தில்லை திருமுறைகளும், பிற பாடலகளும் இதனையே உறுதி செய்து காட்டுகின்றன.

இறைவன் ஆடிய தாண்டவங்களுள் சங்காரத் தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், முதலான் நடனங்களைப் புராணங்கள் பேசுகின்றன. சிவபெருமான் ஆடிய பதினொரு வகை ஆடல்களைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

“பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்”

என்பது சிலப்பதிகாரம். ஏழிசையாய், இசைப்பயனாய் இருப்பவன், ஈசன். ஓசை, ஒலியெலாம் ஆனவன், ஆண்டவன். தில்லையிலே சிவன் திருக்கூத்தனாக ஆடுகிறான். கூத்திற் சிறந்தது கூத்தன் கூத்தே.

“முக்கண்ணன் முன்னொருநாள்
மூவகை கூத்தாக்கினான்”

என்பர் இளங்கோவடிகள்.

**சிவபெருமான் ஆடிய ஏழு நடனங்கள்**

- அஜபா நடனம் – திருவாரூர்
- பிரமதாண்டவ நடனம் : கோளிலி
- உன்மத்த நடனம் : திருநள்ளாறு
- பாராவார தரங்க நடனம்: நாகப்பட்டினம்
- ஹம்ச நடனம்: திருமறைக்காடு
- கமல நடனம்: திருவாய்மூர்
- குக்குட நடனம்: திருக்காறாயில்

திருமந்திரத்தில் இறைவனது ஐவகைக் கூத்துகளின் சிறப்பைத் தெரிவிக்கிறார், திருமூலர். சிவதாண்டவ வளர்ச்சிக்குக் கரு, திராவிடக் கூறுகளிலேயிருந்து முகிழ்த்தது எனச் சுட்டிக்காட்டுகின்றனர், தமிழ் ஆய்வாளர்கள்.

சிற்ப சாஸ்திர நூல்கள் சிவத் தாண்டவ மூர்த்தங்கள் 7 என வகைப்படுத்தி கூறுகின்றன.

ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காஸ்தா தாண்டவம், திரிபுர தாண்டவம், சம்காரத் தாண்டவம்.

**நடராஜர் ஆடிய சபைகள் ஐந்து**

- திருவாலங்காடு இரத்தின சபையில் இரத்தினசபாபதி
- தில்லை கனகசபையில் கனகசபாபதி
- திருநெல்வேலி தாமிர சபையில் தாமிரசபாபதி
- மதுரை வெள்ளியம்பலத்தில் இரசத சபாபதி
- திருக்குற்றாலத்தில் சித்திரசபையில் சித்திரசபாபதி

**ஏழுவகை தாண்டவங்கள்**

- சிதம்பரம் கனகசபையில் ஆனந்த தாண்டவம்
- மதுரை இரசத சபையில் சந்தியா தாண்டவம்
- திருப்பத்தூர் சித்த சபையில் கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம்
- திருக்குற்றாலம் சித்திரசபையில் திரிபுரத் தாண்டவம்
- திருவாலங்காட்டு இரத்தின சபையில் காளிகா தாண்டவம் எனும் ஊர்த்துவ தாண்டவம்.
- திருநெல்வேலி தாமிர சபையில் முனி தாண்டவம் என்னும் காளிகா தாண்டவம்.

**சபாபதி ஸ்தலங்கள்**

1. கைலாசம் – சீகண்டபரமேசுவராலயம்: நடனம்
2. வடாரணியம் : ஊர்த்துவ தாண்டவம்
3. சுவேதாரணியம்: புஜங்கலளிதம் பாம்பைப் போலாடல்

4. சிதம்பரம் : பரமானந்த தாண்டவம்
5. மதுரை: வியத்தியஸ்த்தாண்டவம் வலக்கால் தாண்டவம்
6. கும்பகோனம் : அம்பிகா தாண்டவம்
7. தேவதாருவனம்: வழுவூர் கஜசம்ஹார தாண்டவம்

**நவதாண்டவ தலம்**

கைலாசம் – சந்தியா நிருத்தம்

வெண்காடு – புஜங்கவளித தாண்டவம்

வட ஆலங்காடு – ஊர்த்துவ தாண்டவம் ( 8 கைகள் )

சிதம்பரம் : பரமானந்த தாண்டவம்

மதுரை, கீழ்வேளூர் – வியத்தியஸ்த தாண்டவம் ( 10 கைகள்)

கும்பகோணம் – அம்பிகா தாண்டவம்

அம்பிகைக் கையில் தாளம் இடுப்பில் சங்கிலி மாத்திரம்

வைகல் – இடுப்பில் சங்கிலி மாத்திரம்

வழுவூர் – வாமாங்கிரி முக தரிசனம் ( 8 கை)

பேரையூர் – சம்ஹாரத் தாண்டவம்

உத்தரகோசமங்கை – அதிரகசிய தாண்டவம்

( குஞ்சித பாதத்தில் பேயார் )

நடராஜர் திருவுருவ வழிபாடு வடநாட்டுத் திருத்தலங்களில் வளர்ந்தது. இன்றைக்கு உலகமெங்கும் மன்னர்களது பொற்கால ஆட்சிக் காலத்தில் ஓங்கி வளர்ந்த இந்து சமய மறுமலர்ச்சி காலத்திலே முகிழ்த்ததுதான் ஞான நடராசர் மூர்த்தம்.

பாரதத்தின் வடபகுதியான இலக்குமாண்டல், ஜாகேசுவர், நீலகண்டேசுவர், குவாலியர், புந்தி, சிட்டோகா, நாக்டா, அபு, உதயபுரி என உத்தரப்பிரதேசம், ஒரிசா, ஆந்த்ரா என விரிந்து தமிழகத்தில் வேரூன்றியுள்ளது. இந்தியாவிற்கு வெளியிலேயும் பாலித்தீவுகள், இலங்கை, கம்போடியா, மலேசியா, தாய்லாந்து, சம்பா, இந்தோனேசியா, நேபாளம் போன்ற நாடுகளிலேயும் இம்மூர்த்த வழிபாடு பரவியுள்ளது.

நடராசரது உருவ வழிபாடு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே தொடங்கியதாகக் கண்டயறியப்பட்டுள்ளது. தில்லையில் தற்போது ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற ஆட்வல்லான் முழு உருப்பெற்ற காலம். சோழப் பேரரசியான செம்பியன் மாதேவியின் காலத்திற்கு முந்தியது எனக் குறித்துள்ளனர் ஆய்வாளர்கள்.

கல்லில் செதுக்கப்பட்ட, முதல் ஆனந்தத் தாண்டவச் சிற்பம் கோனேரிராசபுர்த்து என்பது ஆராய்சியாளர்களது கருத்துக் கணிப்பு. இன்றைக்கு கிடைக்கப்பட்டுள்ள ஆனந்த நடராசரது முதல் செப்பு படிவம் பத்தாம் நூற்றாண்டினுடைய ஒவ்கூர் ஆனந்த நடராஜர் பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் தற்போது உள்ள ஆனந்த நடராசர் ஆகியவையாய் இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சிவ தாண்டவ வழிபாடு சங்க இலக்கியமான கலித்தொகையிலும், ஐம்பெரும்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்திலும், ரிக் வேதத்திலும், திருமந்திரத்திலும், உபநிடதங்கள், சிந்துவெளி நாகரிக கூறுகள், வேதநெறிக் கூறுகள் போன்ற பலவற்றிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நடராசத் தத்துவத்தின் பின்னணியாகிய யோக தரிசனமும், நடனவழிபாடும், சிந்துவெளி அகழ்வாய்வின் கூறாகவும் உள்ளன. நடராஜரது யோக நிலை, பதஞ்சலியார் காட்டிய யோக நிலையோடு ஒத்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. சிவபெருமானையே நடராசராக வழிப்பட்ட மரபு மாபாரத்தும், தைத்திரிய சம்கிதையிலும் பதிவாகியிருக்கிறது.

## 5.2 கட்டுரைகள் - சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள்

சைவ ஆதீனங்கள்ணி – ஆசிரியர் ஊரன் அடிகள்

சைவ மடங்களின் பட்டியலொன்று “சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள்” என்ற தலைப்பில் அபிதானசிந்தாமணியில் காணபெறுகிறது.

அபிதானசிந்தாமணி – 1933 இரண்டாம் பதிப்பு

1.திருஆவடுதுறை

2. காஞ்சிபுரம்

3. தருமபுரம்

4.சூனா கோயில் (ஆடுதுறை)

5. ஆகமசிவப்பிரகாசாதீனம் ( சிதம்பரம் )

6. செங்கோலாதீனம் ( பெருங்குளம் திருநெல்வேலி )

7. திருஞானசம்பந்தராதீனம் (மதுரை)

8. திருவண்ணாமலை ஆதீனம் ( குன்றக்குடி )

9.இராமேச்வராதீனம்

10.நீலப்பாடி ( தஞ்சாவூர் )

11. தாயுமானசுவாமிளாதீனம்

12.சாரமாமுனி ஆதீனம் ( திருச்சிராப்பள்ளி)

13.சொர்க்கபுர ஆதீனம் ( அம்பர் திருமாகாளம் )

14. வேளாக்குறிச்சி ஆதீனம் ( திருவாரூர் )

15. வள்ளலார் ஆதீனம் ( சீர்காழி )

16. வருணை ஆதீனம் (வேதாரன்யம்)

17.நாய்ச்சியார் கோயில் ஆதீனம் ( கும்பகோணம் )

18. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் ( மதுரை துழாவூர் )

முதல் பதிப்பில் கூடுதலாக இருந்த ஓர் ஆதீனம் ( இருளஞ்சேரி) இரண்டாம் பதிப்பில் நீக்கப்பெற்று ஆதீனங்களின் தொகை சரியாகப் பதினெட்டாக்கப் பெற்றுள்ளது.

1910ல் வெளிவந்த அபிதானசிந்தாமணி இன்றைய கலைக்களஞ்சியம் போன்றது. தனி ஒருவராக அரிதின் முயன்று அதனை இயற்றி வெளியிட்டவர் சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர் ஆ. சிங்காரவேலு முதலியார். முதலியார் வழங்கும் இப்பட்டியலே ஆதீனங்களின் பெயர் தொகைகளைத் தெரிவிக்கும் முதற்பட்டியல். இப்பட்டியலுக்கு அவர் கொண்ட மூலம் இன்னதெனத் தெரியவில்லை. இப்போது அறியப்பெறும்வரை முதன்முதலாகக் காணப்பெறும் இப்பட்டியலையே பின்வந்தோர் பலரும் பின்பற்றினர்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை ச. சோமசுந்தர தேசிகர் எழுதிய தமிழ்ப்புலவர்கள் வரலாறு – பதினேழாம் நூற்றாண்டு ( முதற்பதிப்பு 1937; இரண்டாம் பதிப்பு 1943 ) 10ம் பக்கத்தில் துறைசை அம்பலவாணதேசிகர் வரலாற்றில், அடிக்குறிப்பாகப் பதினெட்டு மடங்களின் பட்டியலொன்று காணப்பெறுகின்றது. அபிதான சிந்தாமணிப் பட்டியலும் தேசிகர் பட்டியலும் ஒன்றே. தேசிகர் திருப்பூவணநாதருலாவை மேற்கோள் காட்டுகின்றார்.

**உலா நூல்களில் பதினெண் மடங்கள் பற்றிய குறிப்பு:**

காளமேகப்புலவர் பாடிய திருஆனைக்கா உலா, சேறைக்கவிராச பிள்ளை பாடிய திருக்காளத்திநாதர் உலா, திருபூவணம் கந்தசாமிக் கவிராயர் பாடிய திருப்பூவணநாதர் உலா ஆகிய மூன்று உலா நூல்களிலும் சைவமடங்கள் பதினெட்டு என்று கூறப்பெறுகின்றது.

"பதினெண் மடத்திற் பயிலு முதலிகளும்" – திருவானைகாவுலா

"வெண்ணீற்று வண்டற் பதினெண் மடத்தாரும்" – திருக்காளத்திநாதருலா

"சைவமார்க்கப் பதினெண் மடத்தாரும்"-திருப்பூவணநாதருலா

திருக்காளத்திநாதருலாவுக்கும் திருப்பூவணநாதருலாவுக்கும் அரும்பதவுரையெழுதும் டாக்டர் உ.வே. சாமிநாதையர், பதினெண் மடத்தார் என்பதற்குப் பின்வருமாறு உரையெழுதுகிறார்.

பதினெண் மடத்தார் – சிவாகம பத்ததிகள் பதினெட்டும் இயற்றிய சிவாசாரியர்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர்; அப்பதினெண்மர்களாவார்;

துர்வாச சிவர், பைங்களசிவர், உக்ரஜ்யோதி, ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், சுபோதர், வித்யாகண்டர், இராமகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், சோமசம்பு, ப்ரஸாதசிவர், இராமநாதசிவர், ஈசானசிவர் என்ப்வர்கள். “பதினெண் மடத்திற் பயிலு முதலிகளும்” என்றார் திருவானைக்காவுலா உடையாரும். தமிழ்ச் சைவமடங்கள் வேறு. வடமொழிப் பத்ததிகள் செய்த சிவாசாரியர் பதினெண்மர் வழிவந்த மடங்கள் வேறு. தமிழ்ச் சைவமடங்கள் இத்தனை என்ற கணக்கு இல்லை. வேண்டுவதுமில்லை. உலாநூல்களில் குறிப்பிடப்பெற்ற, அந்நாளிலிருந்த, பதினெண் மடங்கள் இன்னவை எனத் தெரியாத பின்னாளில், இருக்கும் மடங்களில் பதினெட்டின் பெயர்கள் பட்டியலிடப் பெற்று விட்டன என்பதே உண்மை. இவ்வுண்மையைச் சைவ உலகும் தமிழுலகும் தெளிவாக நன்கு உணர வேண்டும்.

## 5.3 கட்டுரைகள் - சைவ சமய தத்துவங்கள்

சைவ சமய சிந்தாமணி – ஆசிரியர் கா. அருணாசலம்

தத்துவம் = உண்மை – சுபாவம். பிற சமயங்கள் சமயத் தத்துவங்களைப் பல வகையாகக் கூறுகின்றன. சில சமயங்களுக்குத் தத்துவம் என்பதே இல்லை என்றுங் கூறுகின்றனர்.

மற்றைச் சமயத் தத்துவங்களுக்கு அதிகமாக சைவ சமயத்தில் தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. நியாயம், அதன் விரிந்த கொள்கையே. அண்டம் ( உலகம்), பிண்டம் (உடம்பு) இரண்டையும் தத்துவங்கள் மூலமாகவே இறைவன் நின்று நடத்துகின்றான். தத்துவங்கள் முப்பத்தாறாகவும், தொண்ணூற்று ஆறாகவும், நம் சைவ சமயத்தில் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை உள் நிலைத் தத்துவங்கள், புற நிலைத் தத்துவங்கள் என இரண்டாக வகுக்கப்படும்.

(அ) உள் நிலைத் தத்துவங்கள் ( கருவிகள்) 36

**சிவ தத்துவம் (ஐந்து)**

1. நாதம் (சிவம்)
2. விந்து ( சக்தி)
3. சாதாக்கியம்
4. மகேச்சுரம்
5. சுத்த வித்தை

இவை சுத்த மாயையில் தோன்றுவன. சுத்த தத்துவம் எனவும்படும். இதில் இருந்து சூக்குமை முதலிய நான்கு வாக்குகளும், ஐம்பதொரு அட்சரங்களும், எண்பத்தொரு பதங்களும், சத்தகோடி மகா மந்திரங்களும், வேதாகம சாத்திர்ங்களும், விஞ்ஞான, பிரளயாகலரின் தனு, கரண, புவன, போகங்களும், பத முத்திகளும், பஞ்ச கலைகளும் தோன்றுகின்றன.

**வித்யா தத்துவங்கள் ( ஏழு )**

இவை அசுத்த மாயையில் தோன்றுவன, அறிவை எழுப்புவன. அவையாவன,

1. காலம்: முக்கால, எல்லை, பலம், புதுமைகளைப் பொருந்துவிப்பது.
2. நியதி: அனுபவைக்க வேண்டிய போகத்தையும், தீமை செய்தால் தண்டனையையும், நன்மை செய்தால் நன்மையையும், பயக்கும் என்றும் நிச்சயம் பண்ணுவது. இது ஊழ் – பழவினைப்பயன் எனவும் படும்.
3. கலை: ஆன்மாவின் கிரியையை எழுப்பி ஆணவத்தைச் சிறிது சிறிதாகச் சுகதுக்க பயன்களை அனுபவித்து நீங்கச் செய்வது.
4. வித்தை: ஆன்மாவின் அறிவை விளங்கச் செய்வது.
5. அராகம்: கன்மத்துக் கேற்றவாறு, பெற்றதைச் சிறிதாகவும், பெறாததைப் பெரிதாகவும், மதிக்கும்படி, ஆன்மாவிற்கு இச்சையைக் கொடுப்பது.
6. புருடன்: முற்கூறிய ஐந்து தத்துவங்களோடும் கூடிய நிலையில் உள்ள ஆன்மாவின் தன்மை.
7. மாயை: முன் சொன்ன அசுத்த மாயையாகும்.

**ஆன்ம தத்துவங்கள் ( இருபத்து நான்கு )**

இவை பிரகிருதி என்னும் மாயையில் தோன்றுவன.

1. பூதங்கள் – 5 : 1.பிருதிவி (மண்) 2. அப்பு (நீர்) 3. தேயு(தீ) 4.வாயு(காற்று) 5.ஆகாயம்(வெளி).
2. புலங்கள் – 5 : 1.சத்தம்(ஓசை) 2. பரிசம் (ஊறு) 3. உருவம் (ஒளி) 4. இரசம்(சுவை) 5. கந்தம்(நாற்றம்).
3. ஞானேந்திரியங்கள் (அறிகருவிகள்) – 5 : 1. மெய் 2. நா 3. கண் 4. மூக்கு 5. செவி.
4. கன்மேந்திரியங்கள் ( தொழிற்கருவிகள்) – 5 : 1. வாய் 2. கால் 3.கை 4. எருவாய் 5. கருவாய்.
5. அந்தக் கரணங்கள் – 4 : 1. மனம் 2. புத்தி 3. சித்தம் 4. அகங்காரம். இவை ஆன்மாக்கள், போக்கியங்களைப் பெறுதற்கு கருவியாய் உள்ளன.

**(ஆ) புற நிலைக் கருவிகள் ( தத்துவங்கள் ) 60**

1. பிருதிவி ( மண் ) யின் கூறு : மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஆக – 5
2. அப்பு (நீர்) வின் கூறு: ஒடு நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை ஆக – 5.
3. தேயு ( நெருப்பு) வின் கூறு: உணவு, நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் ஆக 5.
4. வாயு (காற்று)வின் கூறு : ஓடல், நட்த்தல், இருத்தல், நிற்றல், கிடத்தல் ஆக – 5.
5. ஆகாயத் (வெளி) தின் கூறுகள் : காமம் குரோதம், உலோபம், மோகம், மதம் ஆக 5.
6. தச(பத்து) வாயுக்கள் : பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆக – 10.

7. தச(பத்து) நாடிகள் : இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்திரி, சுகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி ஆக – 10.

8. வசனாதிகள் ( தொழிற்கருவிகளின் செயல் ) : கதைத்தல், நடத்தல், கொடுத்தல் – ஏற்றல், மல சலங் கழித்தல், மகிழ்தல் (ஆனந்தம்) ஆக 5.

9. வாக்குக்களாவன: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆக 4.

10. குணங்களாவன : சாத்துவிகம், இராசதம், தாமதம், ஆக – 3.

11. அகங்காரங்களாவன : சாத்துவித அகங்காரம், இராசத அகங்காரம், தாமச அகங்காரம் ஆக 3.

எனவே உள் நிலைக் கருவிகள் மூன்று வகையிலும் முப்பத்தாறும், புறநிலைக் கருவிகள் பதெனொரு வகையிலும், அறுபதும், ஆக தொண்ணூற்று ஆறு தத்துவங்களாகும்.

## 5.4 கட்டுரைகள் - திருமுறைகள் கூறும் அறவுரைகள்

நமது திருமுறைகள் – ஆசிரியர் ஆ. பக்தவச்சலம்

கூறுமின் ஈசனைச் செய்ம்மின் குற்றேவல் குளிர்மின் கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின் சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின் அவலம் இவை நெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தாய் இமையவர்க்கே
பொன்வண்ணத் தந்தாதி தமிழ்வேதம் 11

சேரமான் பெருமான் நாயனார் பொன்னம்பலத்துறையும் பெருமானைப் போற்றிப் பாடியது இப் பொன்வண்ணத்தந்தாதி என்பதாகும். இறைவனும் இதனைத்தான் விரும்பி ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக தனது காற்சிலம் பொலியை நாயனாருக்குக் கேட்கும்படிச் செய்தருள்னார். பொன் வண்ணம் என்று ஆரம்பித்து பொன்வண்ணம் என்று முடியும் இப்பொன்வண்ணத்தந்தாதி இறைவனால் விரும்பி ஏற்கப்பட்டது என்பதை இதனால் தெள்வாக உணரலாம்.

இந்த அந்தாதியில் நாயனார் வானவர்க்கு விருந்தாய் நாம் அமைவதற்கான எட்டு வழிகளை மிகத் தெள்வாக இங்கே அருள்யுள்ளதை காண்போம் அவை,

1. **கூறுமின் ஈசனை:** சிவபெருமான் புகழைக் கூறுங்கள், அவனது திருநாமமாகிய திருஐந்தெழுத்தினை (சிவாயநம) மனதாலும், வாக்கினாலும் சொல்லுங்கள், உலகப்பேச்சுக்களைத் தவிர்த்து ஒதுக்குங்கள், ஈசனது அருட்குணங்களைப் பேசாதநாள் எல்லாம் பிறவா நாளாக கருதுங்கள், ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லா அப்பெருமானை ஆயிரம் திருநாமத்தால் பாடுங்கள், இதுவே முதல்படியாகும்.

**2. செய்மின் குற்றேவல்:** சிவபெருமானுக்கும், அவரது அடியார் பெருமக்கட்கும் தொண்டு செய்ய வேண்டும் ஆலயத்தை தூய்மை செய்தல், மெழுகுதல், கோலமிடுதல், தீபம் ஏற்றுதல், பூத்தொண்டு செய்தல் வேண்டும். மேலும் எவரேனும் நெற்றியில் திருநீறும் மார்பில் உருத்திராக்கமும் அணிந்திருக்க கண்டால் அவர்களைச் சிவமாகவே எண்ணி வழிபடும் மேலான மனம் பெறுதல் வேண்டும். எறிபத்தர், மானகஞ்சாறர், மூர்த்தி நாயனார், முருகநாயனார்,திருக்குறிப்புத் தொண்ட நாயனார், கலிய நாயனார் இப்படி இன்னும் பலர் ஆண்டவனுக்கும் அவரது அடியார்கட்கும் குற்றேவல் செய்து மேன்மையுற்றதை பெரியபுராணத்தால் அறியலாம்.

**3. குளிர்மின் கண்கள்:** கண்களால் ஆண்டவனையும், மால் அறநேயம் மலிந்த அடியார்களையும் கண்டு உள்ளம் குளிர்தல் வேண்டும்.

கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
-அப்பர் தமிழ் வேதம் 4

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம் நினைந்து அங்குவந்து நோக்கி
-திருமுறை 6-61-3

கண்ணினை நின் திருப்பாதப் போதுக் காக்கி
-திருவாசகம். தமிழ்வேதம் 8

இறைவனது திருவுருவத் திருமேனிகளையும், அவர் உறையும் ஆலயங்களையும் அவர்களது அடியார்களையும், கண்களால் தரிசித்து உள்ளம் குளிர்தல் வேண்டும்.

**4. தேறுமின் சித்தம்:** சிவபெருமானுக்கே ஆட்படுதல் வேண்டும் அவனை அன்றி மற்றோர் தெய்வத்தை கனவிலும் நினையாத சித்தம் பெறுதல் வேண்டும்.

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழுந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றே காண்
கங்கையான் திங்கட் கதர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.

காரைக்காலம்மையார் - அற்புதத்திருவந்தாதி

உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே
- திருவாசகம் திருச்சதகம் 2

சிவம் வேண்டார் தமை நாளும் தீண்டேன்.
-திருவாசகம் - உயிருண்ணிப்பத்து

சிவபெருமானை வேண்டார்தமை நாமும் விரும்பமாட்டோம், சிவனடியார், சிவனடியார்களுடன் மட்டுமே நட்புக்கொள்வோம், சிவனையன்றி வேறு தெய்வங்களை கனவிலும் நினைய மாட்டோம் என்று மனம் தேறுதல் வேண்டும்.

**5. தெளிமின் சிவனை**: சிவபெருமான் ஒருவரே முழுமுதற்பொருள் என்று தெள்வடைதல் வேண்டும். பிறவா யாக்கைப் பெரியோன் சிவபெருமானே ஆகும். அவனன்றி ஓர் அணுவும் உலகில் அசைவதில்லை என்றும், அவன் நடத்த நாம் நடக்கின்றோம், நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று தெளிதல் வேண்டும்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியாரேனும் - சுடர் உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறாது என் நெஞ்சவர்க்கு

காரைக்காலம்மையார் - அற்புததிருவந்தாதி

நமக்கு துன்பமே வரினும், இறைவரது கருணை கிடைக்கவில்லை என்றாலும், சிவபெருமானையே தொழுதல் வேண்டும்.

பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானை

திருமுறை 6-1-5

பொதுவான சிறு தெய்வங்களையெல்லாம் வணங்குதலை விட்டொழித்து பெரும் பற்றப் புலியூர் மேவிய பெருமானையே முழுமுதற் பொருளாய் தெள்ந்து வழிபடுதல் வேண்டும்.

சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோம் அல்லோம் அன்றே
உறுபிணியார் செயலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்து ளோமே

திருமுறை 6-98-5

சிவபெருமான் திருவடியை அடைந்துள்ளோம். இனி ஓர் குறை நமக்கு இல்லை. புண்ணியனை நண்ணிய புண்ணியத்தால் பிறப்பும் இறப்பும் ஒழிந்தது. இனி இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று வாழ்தல் வேண்டும்.

**6.செறுமின் செற்றம்:** பகைமை உணர்வு இன்றி வாழ்தல் வேண்டும். இது எப்படி முடியும்? உலகம் முழுவதும் இறைவன் படைப்பே, எல்லாவற்றிலும் கலந்தும், எல்லாவற்றையும் கடந்தும் இறைவன் இருக்கிறான் என்று உணர்தல் வேண்டும்.

எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி
அப்பர் - தமிழ்வேதம் 6

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் வாழ்தல் வேண்டும். காண்கின்ற பொருள்களில் எல்லாம் சிவனைக் காணும் திறம் பெறுதல் வேண்டும். அப்பொழுது நம் மனத்தில் பகைமை உணர்வே தோன்றாது. எல்லாம் சிவமயம் என்று எண்ணும் பொழுது நம் மனதில் அன்பு ஒன்றே நிலைத்துநிற்கும்.

**7. ஆறுமின் வேட்கை:** ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள். ஆசைவிடவிட ஆனந்தம். எனவே, நமக்கு வேண்டியவற்றை நம் தகுதிக்கு ஏற்ப, தக்க சமயத்தில் சிவபெருமான் அளிப்பார் என்று எண்ணி ஆசையற்று இருத்தல் வேண்டும்.

கறவை நினைந்த கன்றென இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்கு
அருள் சுரந்தளிக்கும் அற்புதக் கூத்தன்.
-பட்டினத்துப் பிள்ளையார் - 11 ம் தமிழ்வேதம்

வேண்டத்தக்கதை அறிந்து வேண்டமுழுதும் அளிப்பார் என்று வேட்கையற்று கடமைகளைச் செய்து வருதல் வேண்டும்.

**8. அறுமின் அவலம்:** எதற்கும் கலங்கக்கூடாது. நாம் சிவபெருமானுக்கே ஆளானோம். இனி ஏன் துன்பப்பட வேண்டும்?

அண்ணல் ஆலவாய் நண்ணினான்றனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே
-முதல்தமிழ்வேதம்

நண்ணினார் வினைகள் தீர்ப்பார்
நனிபள்ளி அடிகளாரே
-அப்பர் 4ம் திருமுறை

அருந்துணையாய் அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தாய் சிவபெருமான் இருக்கும் பொழுது அவலம் எதற்கு? நல்காது ஒழியான் நமக்கு என்று அவனுடைய திருநாமத்தைத் துணையாகக் கொண்டால் அவலம் தானே அறும்.

இந்த எட்டு கோட்பாடுகளையும் பின்பற்றி வாழ்ந்தால் வானவர்க்கு விருந்தினராய் அமையலாம்.

## 5.5 திருத்தலங்கள் – கச்சிஏகம்பம் (காஞ்சிபுரம்)

**அருள்மிகு ஏலவார்குழலி உடனுறை தழுவக்குழைந்தநாதர்**

**மரம்:** மா மரம்

**குளம்:** கம்பைமாநதி, சிவகங்கை

**பதிகங்கள்:** வெந்தவெண்பொடி -1 -133 திருஞானசம்பந்தர்
மறையானை -2 -12 திருஞானசம்பந்தர்
கருவார்கச்சி -3 -41 திருஞானசம்பந்தர்
பாயுமால் -3 -114 திருஞானசம்பந்தர்
கரவாடும் வன் -4 -7 திருநாவுக்கரசர்
நம்பனை நகரமூன் -4 -44 திருநாவுக்கரசர்
ஓதுவித்தாய் -4 -99 திருநாவுக்கரசர்
பண்டுசெய்த -5 -47 திருநாவுக்கரசர்
கூற்றுவன் -6 -64 திருநாவுக்கரசர்
உரித்தவன் -6 -65 திருநாவுக்கரசர்
ஆலந்தான் -7 -61 சுந்தரர்
மெய்த்தொண்டர் -11 -29 பட்டினத்தடிகள்

**முகவரி:** காஞ்சிபுரம் வட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம், 631502
தொபே. 044 27222084

மாமரத்தைத் தலமரமாகக் கொண்டுள்ளமையால் இப் பெயர்பெற்றது ஆம்ரம் என்பது வடசொல், அது தமிழில் வழங்கும்போது, தமிழ் இலக்கணத்திற்கு ஒத்தவாறு மகரத்துக்கு இனமாகிய பகரத்தைப்பெற்று ஆம்பரம் என்று ஆயிற்று. மகரத்தின் பின் ரகரம் தமிழில் மயங்காது. ஆம்ரம் என்பது ஏகமென்னும் சொல்லொடு புணர்ந்து ஏகாம்பரம் என்று (வடமொழி விதிப் படி) ஆயிற்று. ஏகாம்பரம் என்பது ஏகம்பம் என்றும், கம்பம் என்றும் மருவிற்று. கள்ளக்கம்பனை, நல்லகம்பனை என்பவைகளில் காண்க.

காஞ்சிபுரம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே சுமார் 2-5.கி.மீ. தூரத்தில் இருக்கின்றது.சென்னை, செங்கற்பட்டு, திண்டிவனம், அரக்கோணம், வேலூர் முதலிய பல நகரங்களிலிருந்தும் காஞ்சிபுரம் வரப் பேருந்துகள் உள்ளன.

**இறைரின் திருப்பெயர்:** தழுவக்குழைந்தநாதர். உலகம் உய்ய ஆகமவழியின்படி இறைவரைப் பூசிக்க இறைவியார் கயிலையினின்று காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளினார்.

அங்கே கம்பையாற்றின் கரையில் திருவருளால் முளைத்து எழுந்த சிவலிங்கத்

திருவுருவைக் கண்டு பூசித்தார். அதுபொழுது கம்பை மாநதி பெருக்கெடுத்து வந்தது. அம்மையார் பயந்து பெருமானை இறுகத் தழுவிக்கொண்டார். அது பொழுது இறைவர் திருமேனி குழைந்து வளைத்தழும்பும் முலைத் தழும்பும் தோன்றக் காட்சியருளினார். அதுகாரணம்பற்றித் தழுவக் குழைந்தநாதர் என்னும் பெயர் உண்டாயிற்று. திருவேகம்பர் என்ற வேறு பெயரும் உண்டு.

**இறைவியாரின் திருப்பெயர்:** ஏலவார்குழலி, காமாட்சியம்மை. **விநாயகர்பெயர்:** விகடசக்கர விநாயகர். இவர் தெற்குத் திருவாசலில், ஆயிரக்கால் மண்டபத்தின் முன் புறத்தில் எழுந்தருளியிருக்கின்றார்.

**தலப்பெருமை:** இது முத்திதரும் தலங்கள் ஏழனுள் முதன்மை பெற்றது. சூளுறவு பிழைத்ததின் காரணமாகத், திருவொற்றியூர் எல்லையைத் தாண்டிய அளவில் இருகண்பார்வைகளும் மறையப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார்க்கு இடக்கண் பார்வையை இறைவர் கொடுத்தருளிய தலம். க்ஷேத்திர வெண்பாக்களைப் பாடிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார், திருக்குறிப்புத்தொண்ட நாயனார், சாக்கிய நாயனார், இவர்கள் அருள்பெற்ற பதி. இதில் பிர்மா, விஷ்ணு, உருத்திரர் என்னும் மூவரும் பூசித்த இலிங்கங்கள் இருக்கின்றன. அவைகள் முறையே வெள்ளக்கம்பம், கள்ளக் கம்பம், நல்ல கம்பம் என்னும் பெயர்களுடன் விளங்குகின்றன.

இக்கச்சிஏகம்பத்திற்கு மாத்திரம் பன்னிரண்டு பதிகங்கள் இருக்கின்றன. இவை மூவராலும் பாடப் பெற்றவை. இவ்வூரில் (காஞ்சிபுரத்தில்) கச்சியேகம்பத்துடன் கச்சி மேற்றளி, கச்சிஓணகாந்தன்றளி, கச்சிநெறிக்காரைக்காடு, கச்சியநேகதங்காவதம் என்னும் தேவாரம் பெற்ற கோயில்களும் கச்சி மயானம் என்னும் ஒரு வைப்புத்தலமும் ஆக ஆறுகோயில்கள் இருக்கின்றன. இவைகளுள் கச்சிமயானம், திருக்கச்சி ஏகம்பத்தினுள் கொடி மரத்தின் முன்னுள்ளது.

இக்கோயிலின் வெளிமதில் கி.பி.1799 இல் ஹாச்ஸன் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. அதில் புத்தர் மகாநிர்வாணம் முதலிய உருவங்கள் எல்லாம் சேர்ந்துவிட்டன. இச்சிலையில் சில பகுதியில் மகேந்திரன் காலத்து எழுத்துக்கள் சில இருக்கின்றன. சில இடங்களில் விஜயநகரச் சின்னங்கள் (வராகமும் கட்கமும்) இருக்கின்றன. முன்மண்டபத்தில் இருக்கும் ஒரு சிலை கரிகாலன் உருவம் என்பர். அதற்குத் தாடி இருக்கிறது. சுவாமிசந்நிதி கிழக்கு. ஆனால், கோபுரவாயில் தெற்கே இருக்கின்றது.

திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச்சிவஞானயோகிகள் அருளிய காஞ்சிப்புராணமும், கச்சியப்பமுனிவர் அருளியதும், அதனுடைய

இரண்டாங்காண்டமென்று சொல்லப்படுவதுமாகிய காஞ்சிப்புராணமும், கச்சியப்பமுனிவர் இயற்றிய கச்சி ஆனந் தருத்திரேசர் வண்டுவிடுதூதும், இரட்டையர்கள் பாடிய ஏகாம்பர நாதர் உலாவும், பட்டினத்துப்பிள்ளையார் அருளிய திருவேகம்ப முடையார் திருவந்தாதியும், மாதவச்சிவஞான யோகிகள் அருளிய கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, திரு ஏகம்பர் (யமக) அந்தாதி ஆகிய இவைகளும் இத்தலத்தைப்பற்றிய நூல்களாகும்.

## 5.6 திருத்தலங்கள் – ஆனைக்கா (திருவானைக்கா)
**அருள்மிகு அகிலாண்டநாயகி உடனுறை நீர்த்திரள்நாதர்**

**மரம்:** வெண்ணாவல்
**குளம்:** காவிரி, இந்திர தீர்த்தம், சந்திர தீர்த்தம்
**பதிகம்:** மழையார் மிடறா -2 -023 திருஞானசம்பந்தர்
வானைக்காவில் -3 -053 திருஞானசம்பந்தர்
மண்ணது வுண்டரி -3 -109 திருஞானசம்பந்தர்
கோனைக் காவிக் -5 -031 திருநாவுக்கரசர்
எத்தாயர் எத்தந்தை -6 -062 திருநாவுக்கரசர்
முன்னானைத் தோல் -6 -063 திருநாவுக்கரசர்
மறைக ளாயின -7 -75 சுந்தரர்

**முகவரி:** திருவானைக்கா அஞ்சல்,
திருச்சி வட்டம்,
திருச்சி மாவட்டம், 620005
தொபே. 0431 2230257

யானை பூசித்துப் பேறு எய்தியதால் இப்பெயர் பெற்றது.

திருவானைக்கா திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரி வட கரையில் விளங்கும் தலம். திருச்சிராப்பள்ளியிலிருந்து நகரப் பேருந்துகள் பல உள்ளன. இறைவரின் திருப்பெயர்: நீர்த்திரள்நாதர். இத்திருப்பெயரை இவ்வூர்த் திருத்தாண்டகத்தில் அப்பர்பெருந்தகையார் ``செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே`` என எடுத்து ஆண்டுள்ளார். இதுவன்றி ஜம்புகேசுவரர் என்று வேறு திருப்பெயரும் உண்டு. வெண்ணாவல் மரத்தின் அருகில் எழுந்தருளியிருப்பதால் இப்பெயர் பெற்றார். (ஜம்பு - நாவல்)

கோயில் ஐந்துபிராகாரம் கொண்ட பெரியகோயில், ஆயிரங்கால் மண்டபம் உண்டு. முதல் மண்டபம் மிகச் சிறந்தது. சுவாமி சந்நிதி மேற்கு, அம்மன் சந்நிதி கிழக்கு. சுவாமி பிராகார மண்டபத்தில் கிழக்கு நோக்கியபடி நிஷ்டாதேவி உருவம் இருக்கிறது. இதனை, சனீஸ்வரர் என்று தவறாக எழுதி இருந்தார்கள். நான்காவது மதில் (திருநீற்றுமதில்) மிகப்பெரியது. இது பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்தலம் ஆகும். (அப்பு- தண்ணீர்) சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தில் நீர் ஊறி வருவது இன்றும் காணத்தக்கது. முற்பிறப்பில் சிலந்தியாயிருந்து சிவபெருமானை வழிபட்ட புண்ணியத்தின் பயனாய் அரசனாய்ப் பிறந்த கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. வெளிப்புறத்து மதிலுக்குத் திருநீறு இட்டான் திருமதில் என்று பெயர்.

இறைவர் சித்தராய் எழுந்தருளித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து எடுப்பித்த காரணத்தால் அம்மதில் அப்பெயர் பெற்றது. திருக்கயிலையிலிருந்து எழுந்தருளி இறைவி இங்குத் தவஞ்செய்து ஞானோபதேசம் பெற்ற காரணத்தால் ஞானஸ்தலம் எனவும் இது வழங்கப்படும்.

உறையூர்ச்சோழர் மணியாரம் தரித்துக்கொண்டு காவிரியில் நீராடினார். அது ஆற்றில் விழுந்துவிட்டது. உடனே அவர் ``சிவபெருமானே கொண்டருளும்`` என வேண்டினார். அந்த மணியாரம் திருமஞ்சனக்குடத்தில் புக, அதனை இறைவருக்கு அபிடேகிக்கும் போது அவர் அதனை ஆரமாக ஏற்றுக்கொண்டு சோழனுக்கு அருள் புரிந்ததும் இப்பதியேயாகும்.

இச்செய்தியை, சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூர்ப்பதிகத்தில், ``தாரமாகிய பொன்னித் தண்டுறையாடி விழுத்து நீரினின்றடி போற்றி நின்மலாக் கொள்ளென வாங்கே
ஆரங்கொண்ட வெம்மானைக் காவுடையாதியைநாளும்`` எனவும் திருஞானசம்பந்தப்பெருமான், ``ஆரம் நீரோ டேந்தினா னானைக்காவு சேர்மினே`` எனவும் சேக்கிழார்பெருமான், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்தில், ``வளவர் பெருமான் திருவாரஞ் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக் கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற அளவில் திருமஞ் சனக்குடத்தி லதுபுக்காட்ட வணிந்தருளி தளரு மவனுக் கருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார்`` எனவும், போற்றுவாராயினர்.

**தலத்தைப் பற்றிய நூல்கள்:** கச்சியப்பமுனிவர் இத்தல புராணத்தையும் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அகிலாண்ட நாயகி மாலையையும் பாடியுள்ளனர். இவைகள் இரண்டும் அச்சேறி வெளிவந்துள்ளன.

**தலத்தின் பெருமையை உணர்த்தும் புராணப்பாடல் ஒன்று பின்வருமாறு:-** ``மேதகைய பயன்விழைவோர் ஞானதலத் துறைகுவது மேவாதாயின் ஓதுக அத்தலப்பெயரை யாங்கதுவு முற்றாதே லுரைப்பக்கேட்க காதலொடு கேட்டவரு மூவகைய பாதகமுங் கடந்துமேலாம் போதமுணர்ந் தெமதடியிற் புக்கிருப்ப ரிஃதுண்மை பொலங்கொம்பன்னாய்.``

-திருவானைக்காப் புராணம் - தலவிசேடப் படலம்.

## 5.7 திருத்தலங்கள் – ஆலங்காடு (திருவாலங்காடு)

அருள்மிகு வண்டார்குழலி உடனுறை ஊர்த்துவதாண்டவேசுவரர்

மரம்: பலா மரம்

குளம்: முத்தி தீர்த்தம்

பதிகங்கள்: கொங்கை திரங்கி -11 -2 காரைக்காலம்மையார்

துஞ்சவரு -1 -45 திருஞானசம்பந்தர்

முத்தாமுத்தி -7 -52 சுந்தரர்

வெள்ள நீர்ச்சடையர் -4 -68 திருநாவுக்கரசர்

ஒன்றாவுல -6 -78 திருநாவுக்கரசர்

முகவரி: திருவாலங்காடு அஞ்சல்,

அரக்கோணம்,

திருத்தணி வட்டம்,

திருவள்ளூர் மாவட்டம், 631210

தொபே. 044 27872443

திருவாலங்காடு இரயில் நிலையத்தி லிருந்து வடக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.தொண்டை நாட்டுத்தலம். திருவள்ளூர் - அரக்கோணம் பேருந்து வழியில் உள்ளது.

நடராஜப்பெருமான் நடனஞ்செய்யும் சபை ஐந்தனுள் இது இரத்தினசபையாகும். இறைவன் காளியை ஊர்த்துவ தாண்டவத்தால் தோற்கச்செய்த தலம்.

இதனைத் தேவாரம் `ஆடினார் காளிகாண ஆலங்காட்டடிகளாரே` என்று சொல்லும். பதஞ்சலி கார்க்கோடகன் என்ற பெயரோடும், வியாக்கிரபாதர் முஞ்சிகேசர் என்ற பெயரோடும் எப்பொழுதும் நடனதரிசனம் செய்வர்.

கைலைக்குத் தலையாலே நடந்துசென்ற காரைக்காலம்மையார், என்றும் திருவடிக்கீழ் ஆனந்த தாண்டவ தரிசனத்தோடு அமர்ந்திருக்கின்றார். திருஞானசம்பந்த சுவாமிகள், அம்மையார் தலையாலே நடந்த தலமென்று மிதித்தற்கு அஞ்சிப் புறம்போக, இறைவன் கனவில் `எம்மைப் பாட மறந் தனையோ` என்று கேட்டுப் பாடல்பெற்ற தலம்.

இங்கே வாழ்ந்த வேளாளர்கள் பழையனூர் நீலிக்குக்கொடுத்த வாக்குப்படி உயிர் கொடுத்து, உண்மையை நிலை நாட்டினார்கள்.

இதனைத் `துஞ்ச வரு வாரும்` என்னும் பதிகத்தில் ஞானசம்பந்த சுவாமிகள் விளக்கியுள்ளார்கள்.

## 5.8 திருவிழாக்கள் - திருக் கார்த்திகை தீபத் திருவிழா

நமது நாட்டில் கொண்டாடப்படும் தெய்வத்திருநாட்களுள் திருக்கார்த்திகையும் ஒன்று. பௌர்ணமி தினத்தன்று, சந்திரன் கிருத்திகை நட்சத்திரத்தில் இருக்கும்போது இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

ஆதிகாலத்திலிருந்தே மக்கள் அக்கினியைத் தெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர். பஞ்ச பூதங்களுள் ஒன்றான அக்கினியை மகிழ்விப்பதே இப்பண்டிகையின் முக்கிய நோக்கமாகும்.

கார்த்திகை தீப திருவிழா மிகப் பழங்காலம் தொட்டே தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. இதை அகநானூறு, நற்றிணை ஆகிய சங்க நூல்களில் நக்கீரர், அவ்வையார் போன்றோரின் பாடல்களால் அறிய முடிகிறது.

சைவ சமய நால்வர்களில் ஒருவரான திருஞான சம்பந்தப் பெருமானின் திருமயிலைத் திருப்பதிகத்திலும் கார்த்திகை தீபம் பற்றிய குறிப்பைக் காணலாம்.

நமது புராணங்களும் திருக்கார்த்திகை விழாவுக்கான காரணக்கதைகளை அழகாக வர்ணிக்கின்றன. திருக்கார்த்திகைக்குரிய தெய்வங்களான சிவபெருமான், மகாவிஷ்ணு, முருகப்பெருமான் ஆகிய தெய்வங்களை வழிபடும்படி கூறுகின்றன.

ஒருமுறை, பிரம்மனுக்கும், மகாவிஷ்ணுவுக்கும் இடையே, தங்களில் யார் பெரியவர் என்ற விவாதம் தோன்ற, அதுவே பெரும் சண்டையாக மாறியது. அப்போது, அடிமுடியில்லாத பெரும் நெருப்புப் பிழம்பாகத் தோன்றிய சிவபெருமான், தன் அடி அல்லது முடியை யார் முதலில் கண்டு வருகிறார்களோ, அவர்களே உலகில் பெரியவர் என்று கூறினார்.

உடனே பிரம்மன் அன்னப்பறவையாக வடிவங்கொண்டு, அந்த ஒளித் தூணின் திரு முடியைக் காண மேல் நோக்கிப் பறந்து சென்றார். மகாவிஷ்ணு வராஹ ( பன்றி ) உருவம் எடுத்து பாதாள லோகம் வரை தோண்டிச் சென்று அந்த நெருப்புத் தூணின் பாதத்தைக் காண முயன்றார். ஆனால், இருவராலும், இறைவனின் அடி, முடியைக் காண முடியவில்லை. சிவபெருமான், அவர்களின் அறியாமையை நீக்கி, " யாரும் யாருக்கும் பெரியவரல்ல; அனைத்துக்கும் முழுமுதலான பரம்பொருளே பெரியவர்" என்று உணர்த்தி ஜோதி ஸ்வரூபமாகக் காட்சி தந்த திருநாளே திருக்கார்த்திகை தீபத் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.

சிவபெருமான் ஜோதியாகத் தரிசனம் தந்து, பார்வதி தேவிக்குத் தம் உடலின் இடது பாகத்தைத் தந்து அர்த்தநாரீஸ்வரராகக் காட்சியளித்ததும் திருக்கார்த்திகை நன்னாளில் தான்.

சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாக உதித்த சண்முகக் கடவுளைத் (முருகப்பெருமான்) தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி வளர்த்தவர்கள் கார்த்திகைப் பெண்கள்.

அவர்களால் வளர்க்கப்பட்டதால் முருகப்பெருமானுக்குக் கார்த்திகேயன் என்ற பெயர் உண்டாயிற்று.

தன்னை வளர்த்த கார்த்திகைப் பெண்களுக்கு சிறப்பளிக்கும்விதம், கார்த்திகை மாதம் பௌர்ணமியோடு கூடிய திருக்கார்த்திகை நட்சத்திரத்தில் அகல் விளக்கேற்றி அதன் தீப வடிவில் தன்னை வழிபடுவோர்க்கு நலன்கள் யாவும் தருவதாக முருகப்பெருமான் அருள் புரிந்தார்.

அதன்படியே, திருக்கார்த்திகை நன்னாளில் முருகப்பெருமானையும் வழிபடுகின்றோம்.

ஒருமுறை சரஸ்வதி தேவிக்குத் தெரியாமல் பிரம்மன் யாகம் நடத்தினான். இதையறிந்த சரஸ்வதி, யாகத்தை அழிக்க மாயநலன் என்ற அரக்கனை ஏவினார். அவன் யாகத்தைத் தடுக்க, உலகம் முழுவதையும் இருட்டாக்கினான்.

பிரம்மன் விஷ்ணு பகவானை வேண்ட, மகாவிஷ்ணு ஜோதியாகத் தோன்றி ஒளிவீசி, இருளை விரட்டி, யாகத்தைக் காத்து அருள் செய்தார். இப்படி ஜோதியாகத் தோன்றிய மகாவிஷ்ணுவைத் தீபத்தின் உருவில் வைஷ்ணவர்கள் வணங்குகின்றனர்.

தென் இந்தியாவில், திருவண்ணாமலை என்ற திருத்தலத்தில் உள்ள உயர்ந்த மலையின் உச்சியில் மிகப்பெரிய நெய்தீபம் ஏற்றி இறைவனை வழிபடுகின்றார்கள். இது அற்புதமான திருக்காட்சியாகும்.

**திருக்கார்த்திகை வழிபாடு**

கார்த்திகை மாதம், பௌர்ணமி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளில் கார்த்திகை விழா ஆரம்பமாகி, சிவா கார்த்திகை, விஷ்ணு ( பெருமாள் ) கார்த்திகை, குப்பை கார்த்திகை என்ற மூன்று திரு நாட்களாகக் கொண்டாடப்படுகின்றது.

திருக்கார்த்திகைத் திருநாளில் அதிகாலை நேரத்தில் வீட்டை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து, மாவிலைத் தோரணம் கட்டி, மாக்கோலமிட்டு அலங்கரிக்க வேண்டும்.

ஜோதியாகத் தோன்றிய சிவபெருமானையும், மகாவிஷ்ணுவையும், கார்த்திகேயனையும் வணங்க வேண்டும். அன்றைய நாளில், தீபங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். தீபமேற்ற உகந்த நேரம் மாலை வேளை என்பதால், மாலையில் அந்தி சாயும் நேரத்தில் வீடுகளில் தீபமேற்றி வழிபட வேண்டும்.

திருவிளக்கிலிருந்து அகல் விளக்குகளை ஏற்றி, அனைத்து அறைகளிலும், வாசலிலும் வைத்து, நம் இல்லத்தில் நிறைந்திருக்கும் தீப ஒளியையே இறைவனின் ரூபமாகக் கருதி வழிபட வேண்டும்.

குறைந்தபட்சம் இருபத்தியொரு தீபங்களாவது ஏற்றி வழிபட வேண்டும்.

பின்னர், தலைவாழை இலை விரித்து, அதில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து, கார்த்திகைச் சிற்றுண்டிகளாகிய கொழுக்கட்டை, பொரி, பிரசாதங்களோடு, பழ வகைகளும் படைத்து, மாவிளக்கு ஏற்றிவைத்து, முதலில் பிள்ளையாரை வணங்கிப் பின்னர் இறைவனைப் பூஜிக்க வேண்டும். " தீப மங்கள ஜோதி நமோ நம " என்ற தீப வழிபாட்டுப் பாடலைப் பாடிப் பூஜை செய்தால் மிக்க நல்லது.

## 5.9 திருவிழாக்கள் - பங்குனி உத்திர திருநாள்

பங்குனி உத்திரம் என்றாலே நினைவுக்கு வருவது திருக்கல்யாணம் அல்லது தெய்வத்திருமணங்கள்தான். பங்குனி உத்திரத்தைத் திருமண விரத நாள் என்றும் அழைப்பர். சிவன், முருகன், அம்பாள் போன்ற தெய்வங்களுக்குத் திருக்கல்யாணம் செய்வித்து, இறைவனைத் திருமணக்கோலத்தில் கண்டு வழிபடும் நாள் இப்பங்குனி உத்திரத் திருநாள்.

**புராண குறிப்புக்கள்**

ஆணவத்தினாலே சிவனை இகழ்ந்த தக்கனுக்குத் தாட்சாயினி என்ற பெயருடன் பிறந்த காரணத்தினால் ஏற்பட்ட களங்கத்தினைப் போக்கிக் கொள்ள,

பார்வதி என்ற பெயருடன் மலையரசன் இமவான் மகளாகத் தோன்றினாள் உமை அம்மை. அவள் காஞ்சியில் கம்பை நதிக்கரையில் மாமரத்தினடியில் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டாள். உயிர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சாதனைகளின் வழி உள்ளன்போடு சிவபூசனையைச் செய்ய வேண்டும் என்பதனை உலகினுக்குக் காட்ட அம்மை அவ்வாறு வழிபாடு செய்ய இறைவன் அதற்குத் துணையாக கம்பை நதியில் வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்கின்றார். மணலால் செய்த சிவலிங்கம் சிதைந்து விடுமே என்று அன்பால் பதறி உமையம்மை சிவலிங்கத்தை மார்புடன் ஆறத்தழுவினாள். அப்போது இறைவன் வெளிப்பட்டு உமையம்மையை மணந்தார். அந்நாளே திருக்கல்யாண நாளான பங்குனி உத்திரத் திருநாள் என்று கந்தபுராணம் மூலமும் பெரிய புராணம் மூலமும் அறிய முடிகின்றது. சூரபதுமன் போன்ற தேவர்களை அழித்து தெய்வயானையை முருகன் திருக்கல்யாணம் செய்த நாள் பங்குனி உத்திரத் திருநாள் என்று கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. பங்குனி உத்திரத் திருநாள் அன்றுதான் திருநந்திதேவரின் திருக்கல்யாணமும் ஐயாறப்பரால் திருமழபாடியில் நடத்துவிக்கப்பட்டது என்ற செய்தியும் கிடைக்கப்பெறுகின்றது.

**திருக்கல்யாண தத்துவம்**

திருவருளே இறைவனுக்குத் திருமேனி அல்லது உடம்பாக அமைவதனால் இறைவனுக்கு மனிதர்களைப் போன்று திருமணம் தேவையில்லை. இறைவன் தமது சிறப்பு நிலையில் தன் திருவருளை அல்லது சக்தியை தன்னுள் ஒடுக்கி வைத்துள்ளார். உயிர்களுக்கு அருள்புரிவான் வேண்டி அவர் தம்மிலிருந்து தன் திருவருளை வெளிப்படுத்தி அதனுடன் பொருந்தி ஐந்தொழில்களை நிகழ்த்துவதாய் உலகமும் உயிர்களும் நலம் பெறுகின்றன என்று மெய்கண்ட சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. அவ்வாறு இறைவன் தன் திருவருளோடு இணைவதையே பலவடிவங்களில் உருவநிலையில் தோன்றி அருளும் இறைவனுக்குத் திருக்கல்யாணம் என்கிறோம். அதனையே புராணங்களும் பாமரரும் விளங்கிக் கொள்ளும் வகையில் கூறுகின்றன.

இறைவன் தன் திருவருளோடு இணையாவிட்டால் உலக இயக்கமும் நின்றுவிடும் என்பதைத் திருச்சாழலில், "தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி பெண்பால் உகந்திலனேல், பேதாய்! இருநிலத்தோர் விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுவார். அதாவது தென்திசை நோக்கித் திருநடனம் ஆடும் தில்லைச் சிற்றம்பலவன், தம்முடைய இடப்பக்கத்தில் உமையம்மையை வைத்திராவிட்டால், மண்ணில் வாழும் உயிர்கள் விண்ணுலகை அடைவதற்காக முழுயோக நிலையைக் கைக்கொள்வர்; இறுதியில் உலக இயக்கம் நின்றுவிடும் என்று கூறிப்பிடுகின்றார். எனவே உலகமும் உயிர்களும் தொடர்ந்து இயங்க வேண்டும்; அதற்கு இறைவன் அவன் திருவருளோடு இணைய வேண்டும் என்ற வேண்டுதலுக்காகவும் நமக்கு இறைவன் ஆற்றுகின்ற பேரருளை நினைவு படுத்திக் கொள்ளவுமே தெய்வங்களுக்குத் திருக்கல்யாணங்களை நடத்துகின்றோம்.

எனவே திருக்கல்யாணம் நிகழ்கின்றபோது வெறும் திருமண சடங்குகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டு அதன் உண்மைப் பொருளை மக்களுக்கு எடுத்துக் கூறாமல் விடுவது நம் பொருள்பொதிந்த உண்மைச் சைவத்திற்கு ஏற்றம் தராது.

திருக்கல்யாணத்திற்குச் சீர் எடுப்பது, மொய்ப்பணம் வைப்பது, மஞ்சள் அரிசித் தூவுவது, தாலிக்கட்டுவது என்பதில் மட்டும் கவனத்தைச் செலுத்தாது அன்றைய தினத்தில் ஆலயத்தில் வழிபடும் அன்பர்களுக்கு உண்மை நெறியினை உணர்த்துவதற்கு ஆவன செய்வதும் இன்றியமையாதது.

**பங்குனி உத்திர சிந்தனை**

இறைவன் திருக்கல்யாணத்தைக் காண்கின்றபோது இறைவன் தன் திருவருளுடன் இணைந்து உலகமும் உயிர்களும் வாழ அருள்புரிவதைப் போன்று திருமணமான அன்பர்கள் தங்கள் திருமணவாழ்வில் இல்லறத்தார்க்குத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள ஐந்து கடமைகளைச் செவ்வன செய்கின்றோமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதாவது தென்புலத்தார், தெய்வம், ஒக்கல், விருந்து, தான் என்ற ஐந்து பிரிவினருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வன செய்கின்றோமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இறைவன் எதையும் எதிர்பார்க்காமல் உலகினுக்கும் உயிர்களுக்கும் செய்யும் உதவியினை எண்ணி நன்றியினால் வழிபட வேண்டும். பங்குனி உத்திரத்தன்று ஆண்டுதோறும் தவறாமல் அடியார்களுக்கு உணவளித்தத் தொண்டினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவர் மனைவி பரவை நாச்சியாரும் செய்வதைப் போன்று இதுபோன்ற நாட்களிலாவது ஏழை எளியவர்க்கு நம்மால் இயன்ற உதவிகளையோ, உணவையோ இறையுணர்வோடு கொடுத்து மகிழ வேண்டும்.

பங்குனி உத்திரத் திருவிழாவைக் காணவேண்டும், இறைவனை வழிபட வேண்டும் என்ற பேராவலில் சங்கிலி நாச்சியாரைப் பிரியமாட்டேன் என்று உறுதி கூறியிருந்த சுந்தரர் அதை மீறி சென்றதைப் போன்று பேராவலுடன் குடும்பத்தோடு திருநாட்காலங்களிலாவது கோவிலுக்குச் சென்று நம் எதிர்கால தலைமுறையினருக்கு நம் சமயத்தையும் பண்பாட்டையும் புகட்ட வேண்டும். எனவேதான் சம்பந்தரும் சிறு வயதிலேயே பூநாகம் தீண்டி இறந்துவிட்டப் பூம்பாவையைப் பார்த்து, “பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள், ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்” என்று பரிவோடுபாடி அவளை உயிர்ப்பிக்கின்றார். அதாவது திருமுறைகள் ஒலிக்க, இசைக் கருவிகள் முழங்க உள்ளத்தில் பக்திக் கிளர்ச்சியூட்டும் பங்குனி உத்திரப் பெருவிழாவைக் காணாமல் போய்விடுவாயோ என்று பொருள்படுகின்றது. அடியார்கள் சிறப்பித்துக் கூறியுள்ள பெருவிழா பங்குனி உத்திரப் பெருவிழா.

தமிழ்நாட்டில் காஞ்சி ஏகம்பநாதர் கோயிலிலும் திருவாரூரிலும், திருப்பரங்குன்றத்திலும் இவ்விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. வாழ்விற்குத் தேவையான பல உண்மைகளை மறைமுகமாக உணர்ந்திடும் நம்

சமயவிழாக்களை அறிந்து உண்மைச் சைவர்களாக வாழ்வோமாக! இன்பமே எந்நாளும் துன்பமில்லை!

## 5.10 நாயன்மார்கள் வரலாறு – திருநீலகண்டர்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

தில்லை மாநகரில் இறைவனுடைய அடியார்களிடம் எல்லையிலா அன்புடையவராகி வாழ்ந்தவர் திருநீலகண்டர். சிவனடியார் உணவு ஏற்று உண்ணும் திருவோடுகளைச் செய்து அடியார்களுக்கு வழங்கும் சிறந்த தொண்டை அவர் செய்து வந்தார். இறைவன் தேவர்கள் அமுதை உண்ணுவதற்காகத் தான் நஞ்சுண்ட பெருங் கருணையை நினைந்து அப்பெருமானுடைய திருக்கழுத்தை போற்றித் திருநீலகண்டம் என்று சொல்லிப் பாராட்டுவார்.

இத்தகைய பக்தர் இளமையின் மிடுக்கால் புறந்தொழுக்கம் உடையவராகி இருந்தமையால் அவருடைய மனைவியார் ஒரு நாள், "திருநீலகண்டத்தின் மேல் ஆணை; எம்மைத் தீண்டக்கூடாது" என்று சொன்னார். அதைக் கேட்ட நாயனாருக்கு உணர்வு உண்டாயிற்று. தாம் செய்த பிழையை நினைந்து இரங்கினார். தம்முடைய உள்ளத்தில் என்றும் மறவாமல் நினைக்கும் திருநீலகண்டத்தின்மேல் ஆணையிட்டுச் சொன்னமையால் அச்சொல் அவருக்கு மிக உறைத்தது. "இனி நான் உன்னைத் தீண்டுவதில்லை. எம்மை தீண்டக்கூடாது என்றமையால் பெண்குலத்தினர் யாரையுமே தீண்டுவதில்லை என்று ஆணை கூற அது முதல் காம இன்பத்தைத் துறந்து வாழ்ந்தார்.

இல்வாழ்க்கையில் மற்ற அறம் யாது தடையின்றி நடைபெற கணவரும் மனைவியும் இன்பம் துய்க்காமல் வாழ்ந்தார்கள். இது புற உலகத்திற்கு தெரியாமலே இருந்தது. இந்த விரதம் தவறாமல் வாழ்ந்து பல காலம் செல்ல அவ்விருவரும் முதுமையை அடைந்தனர்.

அப்போது இறைவன் அவர்களுடைய பெருமையை உலகுக்கு வெளிப்படுத்தும் பொருட்டு, ஒரு சிவனடியாராக வேடம் புனைந்து தன் கையில் ஓடு ஒன்று ஏந்தித் திருநீல கண்டரை நாடி வந்தான். அவனை வரவேற்று வேண்டிய உபசாரங்களை யெல்லாம் செய்தார் திருநீலகண்டர். அப்பால், "அடியேன், தேவரீர் திறந்த்துச் செய்யும் பணி யாது? என்று கேட்டார். அடியாராகி வந்த சிவபெருமான் தன் கையில் உள்ள ஓட்டைக் காட்டி, "இது கிடைப்பதற்கரியது, விலை மதிப்பிடற்கரியது. இது போன்ற ஒன்றை மூவுலகத்தினும் பெற இயலாது. இதனை உம்மிடம் வைத்து செல்கிறேன். மீண்டும் வந்து கேட்கும்போது கொடுக்க வேண்டும்" என்று கூறினான். நாயனார் அப்படியே செய்வதாகச் சொல்லி அதை வாங்கிப் பாதுகாப்பான ஓரிடத்தில் வைத்தார். வந்த அடியார் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

சில காலம் சென்ற பிறகு சிவபெருமான் தான் தந்த ஓட்டைத் திருநீலகண்டர் வைத்த இடத்திலிருந்து மறையச் செய்துவிட்டு அவரிடம் சென்று, “என் ஓட்டைத் தா” என்றான். நாயனார் ஓட்டை வைத்த இடத்தில் போய் பார்த்தார். அங்கே அது இல்லை. வேறு இடங்களில் எல்லாம் தேடியும் கிடைக்கவில்லை. அடியாரிடம் வந்து “அந்த ஓட்டைக் காணவில்லை, இன்னும் சிறந்த ஓடு ஒன்றை நான் தருகிறேன் என்றார். அடியாரோ சினம் மூண்டு, “அப்பொழுதே இந்த ஓட்டின் அருமையைச் சொன்னேனே! எனக்கு அதுதான் வேண்டும் என்று வற்புறுத்தினார். திருநீலகண்டரோ ஒன்றும் செய்ய மாட்டாது விழித்தார். “சுவாமி நான் வேண்டுமென்று அதைக் கெட்டுப் போக்கவில்லை. என்னை மன்னித்தருள வேண்டும்” என்றார்.

அப்படியானால் “நான் அதை எடுக்கவில்லை” என்று சத்தியம் செய்து தருவீரா?” என்றௌ கேட்டான் இறைவன். “செய்து தருகிறேன்” என்றார் நாயனார். “உம்முடைய மகன் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி சத்தியம் செய்து தாரும்” என்றான், வேடம் பூண்டு வந்த் வித்தகன். “எனக்கு மகன் இல்லையே” என்று கூறினார் நாயனார். “இல்லாவிட்டால் உம்முடைய மனைவியின் கையைப் பற்றி மூழ்கிச் சத்தியம் செய்யும்” என்றான் மாயம் வல்ல மகேசன்.

இப்போது நாயனாருக்கு தர்ம சங்கடமான நிலை வந்தது. தம் மனைவியை தாம் தீண்டுவதில்லை என்பதை வெளியிடுவதா என்று யோசித்தார். கடைசியில் “அவ்வாறு செய்வதிற்கில்லை” என்றார்.

நீ வேண்டுமென்றே என் ஓட்டை ஒளித்து வைத்துவிட்டுச் சத்தியம் செய்ய மாட்டேன் என்கிறாய். இந்த அக்கிரமத்தைத் தில்லை வாழந்தணர்களுடைய தர்ம சபையில் முறையிடுவேன்” என்று சொல்லி, நாயனாரையும் அழைத்துக் கொண்டு சென்று, அவையினர் முன் தன் வழக்கை இறைவன் எடுத்துரைத்தான். திருநீலகண்ட நாயனார் ஓட்டைத் தாம் ஒளித்து வைக்கவில்லை யென்றும். அது கெட்டுப் போயிற்றென்றும் கூறினார்.

அப்படியானால் சத்தியம் செய்து தருவதுதானே முறை? என்று அவையினர் சொல்ல, நாயனார் திருப்புலீச்சரத்துக்கு அருகிலுள்ள திருக்குளத்திற்குச் சென்று ஒரு மூங்கில் தடியை எடுத்து ஒரு பக்கத்தை தம் மனைவியரைப் பற்றிக் கொள்ளச் சொல்லி மூழ்கப் போனார். அப்போது வழக்கிட்ட மறைமுனிவன். “கையைப் பற்றிக் கொண்டு மூழ்கினால் தான் நான் நம்புவேன்” என்று சொன்னான்.

இந்த நிலையில் தம்முடைய விரதத்தை யாவரும் கேட்கச் சொல்வதையன்றி வேறு வழியில்லாமல், அந்த வரலாற்றை ஆதி முதல் சொல்லிவிட்டுக் குளத்தில் மூழ்கினார். மூழ்கி எழுந்த அளவில் அவ்விருவரும் இளமை பருவத்தை மீட்டும் அடைந்தவர்களாய் எழுந்தார்கள். அது கண்டு யாவரும் வியந்தார்கள். மறையவனாகி

வந்த சிவபெருமான் தன் கோலத்தை மாற்றி விடையின் மேல் எழுந்தருளிக் காட்சிக் கொடுத்தான்.

பின்பு நாயனாரும் அவர் மனைவியாரும் இளமை நீங்காமல் பலகாலம் இவ்வுலகில் வாழ்ந்து அப்பால் இறைவனுடைய திருவருளைப் பெற்றுப் பேரின்ப வாழ்வை அடைந்தார்கள்.

## 5.11 நாயன்மார்கள் வரலாறு – மூர்த்தி நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

எல்லா வளங்களும் நிரம்பித் தமிழும் தென்றலும் இனிமை செய்து பரவும் பாண்டி நாட்டின் தலைநகரம் மதுரை. அங்கே வணிகர் குலத்தில் தோன்றியவர் மூர்த்தியார். இறைவனிடம் முறுகிய அன்பும், திருநீறும் உருத்திராட்ச்மமாகிய சிவ சின்னங்களை அணிவதில் பேரார்வமும் உடையவர் அவர்.

வணிக பெருங்குலத்தில் பிறந்த செல்வரானாலும் தம் உடல் வருந்தி இறைவனுக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்னும் ஆசையினால் ஒவ்வொரு நாளும் ஆலவாய்ச் சொக்கேசன் திருக்கோயிலில் சந்தனக் கல்லில் சந்தனம் அரைத்து இறைவன் திருக்காப்புக்கு அளிந்த்து வந்தார். இந்தத் திருப்பணி ஒரு நாளும் முட்டாமல் நடைபெற்று வந்தது.

அக்காலத்தில் பாண்டிய மன்னன் தக்க வலிமையுடையவனாக இலலை. அதனால் கருநாடக மன்னன் ஒருவன் பாண்டி நாட்டின்மேல் படையெட்டுத்து வழுதியை வென்று அந்த நாட்டைக் கைப்பற்றினான். மதுரை நகரில் கருநாடக அரசன் இருந்து ஆளத் தொடங்கினான்.

அவன் சமண சமயத்தைச் சேர்ந்தவனாதலால் சமணர்கள் பலரைக் கருநாடக நாட்டிலிருந்து வருவித்தான். சமண குருமார்களுக்கு மதிப்பளித்தான். சைவர்களைப் புறக்கணித்தான். சிவனடியார்களுக்கு அவனும் அவனைச் சார்ந்தவர்களும் பல இடையூறுகளைச் செய்தனர்.

மூர்த்தி நாயனாரையும் பல அல்லல்களுக்கு உட்படுத்தினர். அவருக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்காதபடி செய்தனர். என்ன அல்லல் வந்தாலும் ஆலவாய் இறைவனுக்கு சந்தனக் காப்பு வழங்கும் திருத்தொண்டினின்றும் அவர் பிறழவே இல்லை.

ஒரு நாள் சமணர்களுடைய சூழ்ச்சியினால் அவருக்கு எங்கும் சந்தனக் கட்டைக் கிடைக்கவில்லை பகல் முழுவதும் அலைந்து பல இடங்களுக்குச் சென்று தேடியும் கிடைக்காமல் போயிற்று. அதனால் அவர் மனம் நைந்து வாடி இறைவன் திருக்கோயிலை வந்து அடைந்தார்.

அப்போது அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது "சந்தனக் கட்டைதானே கிடைக்காமல் போயிற்று? சந்தனம் அரைக்கும் கை நம்மிடம் இருக்கின்றதே; கட்டையை அரைக்க இயலாவிட்டாலும் இந்த கையை அரைக்கலாமே!" என்று நினைத்தார். உடனே சந்தனக் கல்லில் தம் முழங்கையை வைத்து தேய்க்கத் தொடங்கினார்.

அப்படி அரைத்தபோது முழங்கையிலிருந்து இரத்தம் வந்தது. தேய்க்க தேய்க்க நரம்பும் எலும்பும் வெளிப்பட்டன. அப்போதும் அவர் கையைத் தேய்ப்பதை நிறுத்தவில்லை. அவர் செய்த செயற்கருஞ் செய்கையை அந்த நள்ளிரவில் எல்லோருக்கும் தாய்போல் உதவும் இறைவன் ஒருவன் தான் அறிவான்.

அவன் கருணைக் கடல் அல்லவா? தன் அடியாருடைய உறுதியையும் அன்பையும் கண்டு வியந்தான். அவர் கையில் எலும்பு தேயக் குருதி கொப்பளிப்பது கண்டு இரங்கினான். உடனே தன் திருவாக்கினால், "அன்ப, உனக்கு தீங்கு விளைத்த மன்னனுடைய அரசை நீ கைகொண்டு திருப்பணியை முட்டின்றிச் செய்து நம்மை அடைவாயாக!" என்றை அருளுரையை எழுப்பினான். அது கேட்ட மூர்த்தியார் வியந்து நின்றார். அவர் கையில் உண்டாயிருந்த தேய்வு மாறிச் சந்தனம் அரைத்த கைபோல் மனமும் வளமும் பெற்றது.

அதே இரவில் கருநாடக மன்னனுடைய ஆயுள் முடிவுற்றது. திடீரென்று நள்ளிரவில் அரசன் இறந்ததை அமைச்சர்கள் அறிந்து கூறினர். இறந்தவனுக்கு மைந்தன் யாரும் இன்மையால், அடுத்தபடி ஆட்சி புரிவதற்கு உரியாரைத் தெரிந்தெடுத்து நிறுவும் பொறுப்பு அமைச்சர்களுக்கு ஏற்பட்டது. பழைய வழக்கப்படி பட்டத்து யானையின் கண்ணைக் கட்டிவிட்டு, அது யாரைத் தன்மேல் ஏற்றிக் கொண்டு வருகிறதோ அவரையே அரசராகக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர் அமைச்சரும் சான்றோரும்.

பொழுது விடிந்தது பட்டத்துக் களிற்றின் கண்களைக் கட்டி இறைவன் திருவருளை எண்ணி அமைச்சர்கள் அதை ஏவினர். அக்களிறு நேரே கோயில் வாயிலை அணுகியது. அப்போது மூர்த்தியார் இறைவன் திருவருட் செயலை எண்ணி வியந்தபடியே, "அரசாட்சியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது திருவருட் சம்மதமானால் அவ்வாறு செய்வதே நம் கடமை" என்று நினைந்து கோயில் வாயிலை அணுகினார். யானை அவர் முன் வந்து பணிந்து அவரைத் தன் பிடரியின் மேல் வைத்துக் கொண்டு செல்லத் தொடங்கியது.

யானையின் செய்கையை ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்த அமைச்சரும் பிறரும், அது மூர்த்தியாரைத் தாங்கி வருவதைக் கண்டனர். உடனே அவரை யானையினின்றும் இறக்கிப் பணிந்து, "திருமுடி தரித்து ஆட்சி புரிய வேண்டும்" என்று

வேண்டினர். அப்போது முர்த்தியார், "பழையபடியே சைவ நெறி ஓங்கும்படி நான் அரசாட்சி புரிவேன்" என்றார்.

தேவரீர் திருவுள்ளப்படியே செய்தால் அதைத் தடுப்பவர் யார்? என்று அமைச்சர்கள் பணிவுடன் கூறினர்.

மணிமுடி தரித்துச் சந்தனம் பூசி அணிகலன் அணிந்து வாழும் அரசு எனக்கு வேண்டாம். இறைவனுடைய திருவருளின் கருவியாக இப்பணியை மேற்கொள்வேன். எனக்கு நீறே சந்தனம்; உருத்திராட்சமே அணிகலன்; சடையே முடி. இந்த மூன்று அடையாளங்களுடன் அரசுக் கட்டில் ஏறுவேன்" என்று சொல்லவே, உடனிருந்தோர் மனம் உவந்தனர்.

சிவ சின்னங்கள் பொலிய மூர்த்தியார் களிற்றின் மேல் ஏறி ஊர் முழுவதும் உலா வந்தார்; அரசு கட்டிலில் ஏறினார். உயிர்களிடத்தில் இரக்கமும், அறத்தை வளர்க்கும் ஆற்றலும், சிவனடியாரிடத்தில் மதிப்பும் சிவபிரான் திருத்தொண்டில் ஈடுபாடும் உடைய மூர்த்தியாருடைய ஆட்சியில் பாண்டி நாடு சிவலோகம் போல விளங்கியது.

எல்லாம் திருவருளின் செயலென்று எண்ணி, மண்ணாளும் செல்வத்தைப் பெற்றும் சிவ சின்னமே பின்னும் உயர்ந்தவை என்று மதித்து வாழ்ந்தவர் மூர்த்தியார். என்ன அல்லல் வந்தாலும் தொண்டு புரிவதை மாற்றாத உறுதி படைத்தவர் அவர்.

மூர்த்தி நாயனார் மும்மையால் உலகாண்ட பெருமையை பெரியபுராணம் மிகச் சிறப்பாக போற்றுகிறது.

## 5.12 நாயன்மார்கள் வரலாறு – அப்பூதியடிகள் நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

சோழ நாட்டில் திருவையாற்றுக்கருகில் திங்களூர் என்ற ஊர் இருகிறது. அங்கே அப்பூதி என்ற பெயருடைய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். சிறந்த ஒழுக்கமும் விரத சீலமும் உடையவர் அவர். களவு முதலிய தீய குணங்களில் யாதும் இல்லாதவர். இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகினார்.

அவருக்குத் திருநாவுக்கரசரிடம் அளவற்ற பக்தி இருந்தது. அப்பர் சுவாமிகளை நேரே கண்டறியாவிட்டாலும், அவர் புறச்சமயத்திற்குச் சென்று இறைவனால் தடுத்தாட் கொள்ளப் பெற்றதும், அரசன் செய்த தீங்கினின்றும் விடுபட்டுச் சிவபிரான் அருளே துணையாக நின்று உய்த்ததும் முதலிய வரலாறுகளைக் கேட்டறிந்து அவரிடம் பேரன்புடையவராக இருந்தார். தம் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் மூத்த திருநாவுக்கரசு, நடுத்திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்ற பெயர்

வைத்தார். பசுவுக்கும், எருமைக்கும், படி முதலிய அளவு கருவிகளுக்கும் அந்த பெயரையே வைத்தார்.

அப்பூதியந்தணர் செல்வமுடையவராதலின் மடம், தண்ணீர்ப் பந்தல், வாவி முதலிய தருமங்கள் பலவற்றைச் செய்தார். எல்லாவற்றுக்கும் திருநாவுக்கரசர் திருநாமத்தையே வைத்தார். தண்ணீர் பந்தலுக்குத் திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல் என்றும், திருக்குளத்திக்குத் திருநாவுக்கரசர் திருக்குளமென்றும், இப்படியே மற்றவைகளுக்கும் பெயரிட்டுப் பக்தியோடு வழங்கி வந்தார்.

திருநாவுக்கரசர் பல தலங்களை வழிபட்டுக் கொண்டு திருப்பழனத்துக்கு வந்து இறைவனைத் தரிசித்துவிட்டு, அருகிலுள்ள வேறு தலங்களையும் தரிசிக்கப் புறப்பட்டார். வரும் வழியில் திங்களூரைக் கண்டார். அங்கே எப்போதும் மக்கள் போய்க்கொண்டிருக்கும் சாலையில் ஒரு தண்ணீர்ப் பந்தல் மிக்க குளிர்ச்சி நிலவுவதாக இருப்பதைக் கண்டார். அதில் எங்கே பார்த்தாலும் திருநாவுக்கரசர் என்ற பெயர் எழுதியிருப்பதைக் கண்டு வியப்படைந்தார். பின்பு, “இந்த பந்தலுக்கு இந்த பெயர் இட்டவர் யார்?” என்று அருகில் இருந்தவர்களைக் கேட்டார்.

அவர்கள் “இவ்வூரில் உள்ள அப்பூதியடிகளே அப்பெயர் வைத்திருக்கின்றார். இதற்கு மட்டும் அன்று குளம், சோலை முதலிய பலவற்றிற்கும் அந்தப் பெயரை வைத்திருக்கின்றார்” என்றார்கள்.

அதைக்கேட்ட அப்பருக்கு பின்னும் வியப்பு மிகுதியாயிற்று. “என்ன கருத்தால் இப்படி செய்திருக்கின்றார்?” என்று சிந்தித்தும் புலனாகவில்லை.

“அப்பூதியடிகள் என்பவர் எவ்விடத்தில் உள்ளவர்?” என்று அவர் கேட்டார். “அந்த வேதியர் இவ்வூர்க்காரர் தாம். இத்தனை நேரம் இங்கே இருந்தார். இப்போது தான் தம் வீட்டுக்குச் சென்றார். அந்த வீடும் அருகிலே இருக்கின்றது” என்று அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள்.

உடனே நாவுக்கரசர் அப்பூதியடிகளின் வீட்டை நாடிச் சென்று வாயிலை அணுகும்போதே. வீட்டுக்குள் இருந்த அந்தணர், யாரோ சிவனடியார் வந்திருக்கிறார் என்பதைக் கேட்டுப் புறத்தே வந்தார். வந்து அப்பருடைய அடியைப் பணிய அவரும் அப்பூதியைப் பணிந்தார். “தாங்கள் என் இல்லத்திற்கு எழுந்தருளியதற்கு நான் என்ன தவம் செய்தேனோ? எளியேனால் ஆகும் காரியம் ஏதேனும் உண்டோ? என்று பணிவுடன் அப்பரைக் கேட்டார்.

நான் திருப்பழனத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபட்டுவிட்டு வருகிறேன். வழியில் நீங்கள் வைத்திருக்கும் தண்ணீர் பந்தலைக் கண்டேன். வேறு பல

தர்மங்களும் நீங்கள் செய்வதை அறிந்து உங்களைப் பார்க்க வந்தேன். ஒரு சந்தேகம் என்றார்.

“என்ன?” என்று அப்பூதியடிகள் கேட்டார்.

“சிவனடியார்களுக்குப் பயன்படும்படி நீங்கள் வைத்திருக்கும் தண்ணீர் பந்தலில் உங்கள் பெயரை எழுதாமல் வேறு யார் பெயரையோ எழுதியிருக்கிறீர்களே! என்ன காரணம்?” என்றார்.

இதைச் செவியுற்ற அப்பூதியடிகளுக்கு கோபம் உண்டாயிற்று “அப்பர் சுவாமிகளுடைய பெருமையை அறியாமல் பேசுகிறாரே!” என்ற நினைவுதான் காரணம்.

“நீங்கள் சொல்லுவது நன்றாக இல்லையே! சமணர் பேச்சைக் கேட்டு இன்னல் செய்த மன்னனுடைய சூழ்ச்சியைத் திருத்தொண்டு வலிமையால் வென்ற பெரியாருடைய திருநாமத்தையா வேறு யார் பேரோ என்று சொல்கிறீர்? இறைவன் திருவடித் தொண்டுபுரிந்தால் மறுமையில் இன்பப் பேறு பெறுவது மாத்திரம் அன்று; இம்மையிலும் தீங்கு நீங்கி நலம்பெற்று உய்யலாம் என்பதை என்போல்வாரும் தெளியும்படி அருட்செயல் புரிந்த திருநாவுகரசருடைய திருப்பெயரை இங்கே எழுதிருக்க, நீங்கள் வெய்ய வார்த்தை சொன்னீர்களே! கல்லைக்கட்டிக் கடலில் போட்டபோது அந்த கல்லே தெப்பமாகக் கரையேறிய அந்த பெருமானுடைய பெருமையை உலகத்தில் அறியாதவர்களும் உண்டா? சிவவேடப் பொலிவுடன் இருக்கும் நீங்கள் இப்படி பேசுவது வியப்பாக இருக்கின்றதே! நீங்கள் எங்கே இருப்பவர்கள்? நீங்கள் யார்? என்று படபடப்புடன் கேட்டார்.

அப்பர் சுவாமிகளுக்கு அடிகளின் உள்ளக் குறிப்பும் அவருக்குள்ள பக்தியும் புலனாயின. “ வேறு துறையினின்றும் மீண்டு வருவதற்காக இறைவன் அருளிய சூலை நோயால் ஆட்கொள்ளப் பெற்று, மீட்டும் அவனை அடைந்து உய்ந்த அறிவிலா சிறியேன் அடியேன்” என்று பணிவாக சொன்னார்.

அதைக் கேட்டதுதான் தாமதம்; அப்பூதியடிகள் மெய்ம் மறந்தார். அவர் கைகள் தாமே தலைமேல் குவிந்தன. கண்ணில் அருவி பொழியத் தொடங்கியது. உரை குழறியது. உடம்பெல்லாம் புளகம் போர்த்தது. தரையில் வீழ்ந்து அப்பருடைய திருவடியைப் பற்றிக் கொண்டார்.

அப்பரும் அப்பூதியடிகளை வணங்கிக் கையால் எடுத்துவிட அடிகள் ஆனந்த கடலில் மூழ்கிக் கூத்தாடினர்; ஓடினார்; பாடினார். இன்னதுதான் செய்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குள் போய்த் தம் மனைவி மக்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்து அவர் காலில் வீழச்செய்தார்.

பின்பு அப்பரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று திருவடியை நீரால் விளக்கி அந்நீரைத் தெளித்துக் கொண்டு உண்டார். பிறகு ஆசனத்தில் அமரச் செய்து திருநீறு ஏந்தி, "இங்கே அமுது செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய, அவரும் அதற்கு உடன்பட்டார்.

"என்ன பேறு பெற்றோம்!" என்ற பேருவகையுடன் அப்பூதியார் தம்முடைய மனைவியாரிடம் கூறி இனிய விருந்துணவு சமைக்கச் சொன்னார். அப் பெருமாட்டியாரும் பேரன்புடன் அறுசுவை உணவு சமைக்கத் தொடங்கினார். எல்லாம் சமைத்து முடியவே, அமுது படைக்கத் தோட்டத்துக்குச் சென்று வாழை இலை அரிந்து கொண்டு வரும்படி தம்முடைய முதல் மகனாகிய மூத்த திருநாவுக்கரசை அனுப்பினார்.

அவன் மிக்க விரைவில் சென்று பெரிய வாழை மரம் ஒன்றில் உள்ள குருத்தை அரியும் போது அங்கே இருந்த பாம்பு அவன் கையைக் கடித்துவிட்டது. கையை சுற்றிக்கொண்ட பாம்பை உதறிவிட்டு மிக்க பதைபதைப்புடன், "இந்த நஞ்சு வேகம் ஏறுவதற்குமுன் நான் இக் குருத்தைக் கொண்டு போய் சேர்க்க வேண்டும்" என்று எண்ணி ஓடிவந்தான். "நிகழ்ந்ததை யாருக்கும் சொல்லாமல் இதைக் கொடுத்துவிடலாம்" என்று எண்ணி ஓடும்போது, நஞ்சு மெல்ல மெல்ல அவன் தலைக்கு ஏறியது. வீட்டை அடைவதற்குள் அவன் உடம்பு நீலம் பார்த்துவிட்டது. வீட்டுக்கு எப்படியோ சென்று தாயார் கையில் வாழைக் குருத்தை அளித்து அப்படியே விழுந்து உயிர் நீத்தான்.

அதைக் கண்ட தாயாரும் தந்தையாரும் உள்ளம் பதைத்து உற்று நோக்கும்போது, உடம்பிலுள்ள குறிகளைக் கொண்டு, பாம்பு விஷத்தால் இறந்தான் என்று தெரிந்து கொண்டனர். அதனால் துயரம் அடையாமல், "கிடைத்தற்கரிய பெரும் பேறாக இங்கே வரப்பெற்ற அப்பருக்கு அமுது செய்விக்க காலம் தாழ்கிறதே!" என்று வருந்தி தம் மகன் உடலை ஒரு பாயில் சுருட்டி ஒரு மூலையில் மறைத்து வைத்து அப்பரிடம் வந்தார்கள். "அமுது செய்தருள வேண்டும்" என்று பணிவுடன் சொல்லி அவரை அழைத்துச் சென்று திருவடி விளக்கி ஆசனத்தில் இருத்தினார்கள். அப்பர் அவ்வாசனத்தில் இருந்து வெண்ணீறு அணிந்து அப்பூதியடிகளுக்கும் அவர் மனைவியாருக்கும் புதல்வர்களுக்கும் நீறு அளித்தார். அப்போது, "உங்கள் மூத்த பிள்ளை எங்கே? அவனையும் அழையுங்கள். திருநீறு அளிக்க" என்றார்.

அப்பூதியடிகள் சற்றே உள்ளம் கலங்கி என் செய்வதென்று விழித்தாலும் உடனே தேறி, "அவன் இப்போது இங்கு உதவான்" என்றார்.

அதைக்கேட்ட அப்பருக்கு, ஏதோ உள்ளத்தில் ஒரு தடுமாற்றம் உண்டாயிற்று. "நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. என் மனதுக்கும் சமாதானம் உண்டாகவில்லை. உண்மை என்ன? சொல்லுங்கள்" என்று கேட்டார்.

“இப் பெரியார் அமுது செய்ய இயலாதவாறு தடை வந்து விட்டதே!” என்று வருந்தினாலும், உண்மையை உரைக்காமல் இருக்க கூடாது என்று எண்ணி நிகழ்ந்ததை அப்பூதியடிகள் சொன்னார். அது கேட்ட நாவுக்கரசர், “நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள்?” தமக்குற்ற துயரையும் மறந்து இப்படிச் செய்வார் யார் இருக்கிறார்கள்?” என்று வியந்தபடியே எழுந்து சென்று, அவர்களுடைய திருமகன் சடலத்தை அணுகி வெளியே எடுத்து வரச் செய்தார். உடனே இறைவனை நினைந்து, “ஒன்று கொலாம் என்ற திருப்பதிக்கத்தை பாடியருளினார். பதிகம் நிறைவேறியவுடன் மூத்த திருநாவுக்கரசு துயிலினின்றும் எழுபவனைப் போல விஷம் தெளிந்து எழுந்தான். எழுந்து, அப்பரை வணங்க, அவர் புனித நீறு அளித்தார்.

இந்த அற்புதத்தைக் கண்டு அப்பர் சுவாமிகளின் பெருமையையும் தொண்டு நெறியின் சிறப்பையும் யாவரும் நினைந்து பாராட்ட அப்பூதி அடிகளும் அவர் மனைவியாரும், “அறிய முடியாத பெருமையை உடைய இப் பெரியார் திரு அமுது செய்யச் சிறிது தாமதம் உண்டாகச் செய்தான் இவன்” என்று சிறிதே மனம் நொந்தனர். அது கண்ட திருநாவுக்கரசர் உடனே உள்ளே சென்று அமுது செய்தருளினார். தங்கள் மனம் குளிர அடிகளும் மனைவியாரும் உபசாரம் செய்தார்கள்.

அங்கே சில காலம் அப்பர் தங்கிப் பின்பு திருப்பழனம் என்னும் தலத்துக்குத் திரும்பினார். அவருடைய உள்ளத்தில் அப்பூதியடிகளுடைய அன்பு ஆழமாகப் பதிந்து விட்டது. அதனால் அத்தலத்தில் வழிப்பட்டுத் திருப்பதிகம் பாடுகையில், இறுதிப் பாசுரத்தில், “அஞ்சிப் போய்க் கலி மெலிய அழலோம்பும் அப்பூதி, குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்” என்று அப்பூதியடிகளைச் சிறப்பித்தார்.

திருநாவுக்கரசர் தம் வீட்டுக்கு எழுந்தருளியதைப் பெரும் பேறாகப் போற்றி உவகைக் கடலுள் ஆழ்ந்த அப்பூதியடிகள், தம்முடைய அறச் செயல்களில் வழுவாமல் அப்பரைப் போற்றி நெடுங்காலம் வாழ்ந்தார்.

இறைவனுடைய அடியாராகிய அப்பர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரே. அப்பூதியடிகளுக்கு அப்பர் குருவும் தெய்வமுமாக விளங்கினார். நமக்கு இருவரும் நாயன்மார்களாக விளங்குகிறார்கள். அரன் அன்பருக்கும், அடியார் அன்பருக்கும் வேறுபாடு இல்லை என்ற உண்மை இதனால் புலனாகிறது.

## 5.13 நாயன்மார்கள் வரலாறு – அதிபத்த நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

கடற்கரையை அடுத்த நகரங்களைப் பட்டினம் என்பது தமிழ் வழக்கு. சோழ நாட்டில் காவிரிபூம்பட்டினம் சிறந்த பெருநகரமாக விளங்கியது. அதற்கு அடுத்த சிறப்புடையது நாகப்பட்டினம். கப்பல் வாணிபம் செய்யும் பல பெருமக்கள் வாழும் செல்வம் மிக்க நகரம் அது. வேற்றுநாட்டுப் பொருட்கள் கலங்களிலிருந்து இறங்க

உள்நாட்டுப் பொருள்கள் அவற்றில் ஏற எப்போதும் இடைவிடாத ஆரவாரம் உடையதாக இருப்பது. குதிரைகளும் யானைகளும் ஆடை அணிகளும் வந்து இறங்கும் துறைமுகத்தை உடையது.

அந்நகரின் ஒருசார் நெய்தல் நில மக்களாகிய வலைஞர் வாழும் பகுதி ஒன்று உண்டு. கடலில் வலை வீசி மீன்களைப் பிடித்து விற்று வாழும் மக்கள் அங்கே இருந்தனர். வலையிலுள்ள கயிறுகளைப் பிடித்து இழுப்பவர்களின் ஒலியும், மீன் விலை பகர்பவர்களின் ஆரவாரமும், சங்குகளைக் குவிப்பவரின் முழக்கமும் கடலொலிபோலப் பொங்கும் இடம் அது.

அத்தகைய நுளையர் பாடியில் வாழும் வலைஞர்களுக்குத் தலைவராக அதிபத்தர் என்பவர் இருந்தார். அவர் சிவபெருமானிடம் நிறைந்த அன்புடைய அடியவர். அங்கே வாழும் வலைஞர்கள் கடலில் படகை இயக்கிச் சென்று மீன்களைக் கொணர்ந்து குவிப்பார்கள். அவற்றைத் தம்முடைய வருவாயாகப் பெற்று மீன் வாணிகம் செய்து செல்வராக ஓங்கி நின்றார் அதிபத்தர்.

அந்த அடியார் ஒரு சிறந்த கொள்கையை மேற்கொண்டிருந்தார். வலையில் அகப்படும் முதல் மீனை, "இது சிவபெருமானுக்கு உரியது" என்று கடலிலே விட்டுவிடுவது அவர் வழக்கம். தமிழ் நாட்டில் உள்ளவர்கள் முதலில் உண்டாகும் விளைபொருளை இறைவனுக்குக் கென்று வழங்கிவிடுவது மரபு. காயோ, கனியோ, நெல்லோ, புல்லோ எதுவானாலும் முதலில் விளைந்ததைத் தனியே எடுத்து இறைவனுக்கு என்று வைத்துவிடுவார்கள். அந்த முறையில் அதிபத்தர் முதல் மீனை இறைவனுக்கென்று கூறிக் கடலில் விட்டுவிடச் செய்தார்.

எவ்வளவு குறைவாக மீன் கிடைத்தாலும், முதலில் கிடைக்கும் மீன் மிகப்பெரியதாக இருந்தாலும், அந்த மீனைக் கடலில் விட்டுவிடுவார். ஒரே ஒரு மீன் மாத்திரம் ஒருநாள் கிடைத்ததால் அதை இறைவனுக்கென்று விட்டுவிட்டு வெறுங் கையோடு வருவார். எந்த வகையிலும் தம்முடைய விரதம் மாறாமல் ஒழுகி வந்தார் அவர்.

இப்படி இருக்கையில் இறைவன் செய்த்த சோதனையால் தொடர்ந்து பல நாட்கள் ஒரு மீனே கிடைத்து வந்தது. அவர் அதைக் கடலிலே விட்டுவிட்டு வெறுங்கையோடு விட்டுக்கு வந்தார். வலைவளம் சுருங்கியமையாலும், தாம் பெற்ற ஒரு மீனையும் விட்டுவிட்டு வந்தமையாலும் அவருடைய செல்வம் கரைந்தது. உறவினர்களுக்கு வேண்டியதை அளித்துப் பாதுகாத்தார். நாளடைவில் பொருள் கரைந்து உணவு பெற இயலாத வறுமை வந்து அடைந்தது. தமுடைய வீட்டில் உள்ள மனைவி மக்கள் பட்டினியால் சோம்புவதை அறிந்தும், அவர் தம்முடைய

கொள்கையினின்றும் வழுவவில்லை. ஒவ்வொரு நாளும் கிடைத்த ஒற்றை மீனைச் சிவபெருமானுக்கு என்று விட்டு வந்தார்.

உணவின்றி அவர் உடம்பு வாடியது. ஆயினும் கொள்கை மங்கவில்லை. இறைவன் தன் சோதனையைப் பின்னும் கடுமை ஆக்கினான். ஒருநாள் அவருடைய வலையில் மிகவும் பளபளப்பான மீன் ஒன்று படும்படி செய்தான். உடம்பெல்லாம் பொன்னால் அமைத்து அங்கங்கே நவமணிகளைச் செதில்களாகவும் கண்ணாகவும் கொண்ட மீன் அது. அதன் விலை அளவிடுதற்கரியது. அதனைப் பிடித்த வலைஞர்கள் மிக்க வியப்படைந்து, "இதோ ஒரு மீனை பிடித்துவிட்டோம்" என்றார்கள். சிவபெருமானுடைய அடித்தொண்டராகிய அதிபத்தர் அதைப் பார்த்தார். பொன்னும் நவமணியும் இணைந்து பொருந்திய மீன் என்பதை உணர்ந்தார். ஆயினும் அதனை எடுத்துக்கொண்டு பயன் அடையும் எண்ணம் அவருக்கு உண்டாகவில்லை. "இந்த மீன் வழக்கம் போல் எம்பெருமானுக்குரியது ஆதலின் கடலில் விட்டுவிடுக என்று சொல்லி விடச் செய்தார்.

பொருள்களில் ஆசை இல்லாதவர்கள் உலகத்தில் மிக அரியர். மனைவி மக்களுடன் வாழ்ந்து தமக்கென ஒரு தொழிலை மேற்கொண்டு வாழ்கிறவர்களுக்குப் பொருள் இன்றியமையாதது. ஆதலின் அவர்கள் ஆர்வத்தோடு பொருளை ஈட்டுவார்கள். இப்படி இருக்க, வறுமை வந்து நலிந்த போதும், பசியிலும் இறக்கு துன்பத்திலூம் தாம் கொண்ட கொள்கையை விடுவது பெரும் துன்பம் என்று அதிபத்தர் எண்ணினார். அந்த ஒரு நாள் தம் கொள்கையை விட்டுவிட்டுக் கிடைத்த மீனை விற்றிருந்தால் பொற்குவையே பெற்றிருக்கலாம். அவர் அவ்வாறு நினைக்கவில்லை. இறைவனுக்கு உரியதாக செய்யும் முதல் மின் அதுவாதலின், அது சிறிதாயுனும் பெரிதாயினும், விலை சிறந்ததாயினும் தாழ்ந்ததாயினும் அவனுக்கு உரியதென்று உறுதியாக எண்ணி விட்டுவிட்டார்.

அன்பினால் மேற்கொண்ட விரதத்தைப் பொருளாசையால் விட்டு மயங்காமல் கடைபிடித்த அன்பருடைய பெருமையை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்ற திருவுள்ளம் கொண்டான் இறைவன். பொன்னும் மணியும் உறுப்பாக பெற்ற அந்த மீனை மீண்டும் கடலிலே அதிபத்தர் விடச் செய்த அந்த கணத்தில், சிவபெருமான் விடையின் மேல் அருளுருவாகிய அம்மையுடன் எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினார். இறைவன் வணங்கி இன்ப வாரிதியில் குளித்த அதிபத்தர் என்றும் மாறாத இன்ப வாழ்வைப் பெற்றார்.

## 5.14 **நாயன்மார்கள் வரலாறு –** வாயிலார் நாயனார்

*நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்*

மனிதன் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று காரணங்களினாலும் செயல் புரிகிறான் நினைப்பு, பேச்சு, செயல் என்ற அக் கரணங்களின் இயக்கத்தைக் குறிப்பது

வழக்கம். இந்த மூன்று கரணங்களும் மனிதனுடைய பிறப்பின் சிறப்பை எடுத்து காட்டுவனபோல், மற்ற உயிர்களிடம் இருப்பனவற்றைவிட மிக மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. அம்மூன்றிலும் அவனது மனம் பெற்ற வளர்ச்சி விரிவாகவும் அமைந்திருக்கின்றது. "நுண்மாண் நுழைபுலம்" என்றும், "அகன்ற அறிவு" என்றும் மனித அறிவை பாராட்டிப் பேசுவார்கள் புலவர்கள்.

உடம்பாலும் வாக்காலும் செய்யும் செயல்களால் அடையும் பெருமையைவிட உள்ளத்தால் செய்யும் செயல்களே மனிதனுக்கு அதிகப் பெருமையை உண்டாக்குகின்றது. முன்னுள்ள அனுபவத்தையும் நிகழ்கால செயல்களையும் வருங்கால விளைவுகளையும் ஓர்ந்து நலந்தீங்குகளை நாடி ஆராயும் ஆற்றலை மனிதன் படைத்திருக்கிறான். ஆதலின் உள்ளத்தினால் மேலும் உயரும் நிலையில் இறைவன் அவனை வைத்திருக்கிறான்.

இறைவனை மனமொழி மெய்களால் வணங்க வேண்டும்

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்

தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை"

என்று திருநாவுக்கரசர் அருளினார். உடம்பால் வணங்கி வாயினால் வாழ்த்தி மனத்தால் தியானம் செய்யவேண்டும். உடம்பால் வணங்குவது எளிது; அதைவிட அரிது புகழ் பாடுதல்; அதையும்விட அரிது தியானித்தல். காயிகம், வாசிகம், மானசம் என்ற மூன்று தொண்டுகளில் மானசிகம் சிறந்ததென்று நூல்கள் கூறும் மானசிக பூசை சிறந்ததென்பதைப் பெரியோர்கள் வாக்கால் தெரிந்து கொள்ளலாம். உள்ளத்தால் செய்வனவற்றின் பெருமையைத் தெரிவிக்க ஒரு கதை சொல்வதுண்டு.

ஒருநாள் அருச்சுனன் கைலாசத்தின் வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே இருந்த சிவ கணங்கள் நிலவுலகில் பூசை புரிவார்கள் இட்ட நிர்மாலியத்தை வாரி வெளியிலே கொட்டிக் கொண்டிருந்தார்கள். வில்வமும் பல மலர்வகைகளும் மலைபோலக் குவிந்திருந்ததைப் பார்த்தபோது, "இது நம்முடைய பூசையின் நிர்மால்யம்" என்று அருச்சுனன் நினைத்தான். சிவகணங்களை நோக்கி, "இது யார் செய்த பூசையின் நிர்மாலியம்?" என்று கேட்டான். "பூலோகத்தில் பஞ்சபாண்டவர்கள் என்ற ஐந்து பேர்கள் நல்ல சிவ பக்தர்கள். அவர்களில் ஒருவன் பூசையில் போட்டது" என்றார்கள். அவனுக்குச் சற்றே பெருமிதம் உண்டாயிற்று.

"அவன் பெயர் என்ன?"

"வீமனாம் இந்த மலையைப் போல அந்தப் பக்கம் இன்னும் குவிந்து கிடக்கிறது" என்றார்கள் சிவகணங்கள்.

“வீமனா!”

அருச்சுனனுக்கு வியப்பு தாங்கவில்லை

அந்த அண்ணா உட்கார்ந்து சிவ பூசை பண்ணியதாக நமக்குத் தெரியவில்லையே!” என்று எண்ணமிடலானான் அவன். பிறகு, “அருச்சுனன் என்பவன் செய்த பூசா நிர்மாலியம் எது?” என்று கேட்டான். அது அளவிடற்கரிய பெருமலையாக இருக்கிறது என்றை விடையை எதிர்ப்பார்த்தான். அவர்களோ, “அதுவா?” அங்கே ஒரு குடலையில் இருக்கிறது” என்று அலட்சியமாக சொன்னார்கள்.

அருச்சுனனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவன் மனம் சுழன்றது, “வீமன் பூசை செய்ததை நான் பார்த்ததில்லையே!” என்றான்.

அவன் மனசினாலே பூசை செய்கிறவன். ஒரு நந்தவனத்தைக் கண்டால் அங்குள்ள அத்தனை மலர்களையும் பத்திரங்களையும் சிவபிரானுக்கு என்று மனத்தால் அர்ப்பித்துவிடுவான். அது இங்கே மலையாகக் குவிந்துவிடும்.

அருச்சுனனுக்கு மானசிக பூசையின் சிறப்பு நன்கு புலனாயிற்று.

மயிலாப்பூரில் இவ்வாறு உள்ளத்தால் பூசை இயற்றிய அன்பர் ஒருவர் இருந்தார். அவரை வாயிலார் நாயனார் என்பர். வேளாண்குடியில் தோன்றிய அவர் சிவபிரானை உள்ளத்தால் வழிபடும் திருத்தொண்டில் சிறந்து விளங்கினார். மனதுக்குள் தியான முறையில் கோயில் கட்டிப் பூசை செய்தார். மறவாமையால் மனக்கோயில் அமைத்துச் சிவபிரானை உள் இருத்தி ஞான விளக்கு ஏற்றி ஆனந்தம் என்னும் திருமஞ்சனம் ஆட்டி, அன்பு என்னும் அமுது அமைத்து அருச்சனை செய்து வந்தார். புறத்தே காணும் மலர், மஞ்சனம், அமுது முதலிய பொருள்களை வைத்து வழிபடும் போதே நமக்கு மனம் பலவாறாகச் சிதறுகிறது. அவருக்கோ மனத்தில் நினைத்தது அப்படியே நின்றது. அதாவது எண்ணியதை மறப்பதில்லை. தூய உள்ளமாதலின் ஒருமைப் பாட்டோடு எண்ணிய எண்ணம் நன்றாகப் பதிந்தது. அதனால் அவர் மனத்தாலே ஆலயம் அமைத்து, மனத்தாலே பூசை செய்தார். இவ்வாறு செய்வதிலே நெடும்போது கழித்தார். மானசிக பூசையில் காலம் போவதே தெரியாது. மனம் ஒருமைப்பாடு இல்லாமல் இருந்தால் சிறிது காலமும் நெடுங்காலமாகத் தோன்றும். ஒருமைப்பாட்டால் நெடுங்காலமும் குறுகிவிடும். தியானத்தால் காலத்தை வெல்லலாம் என்பதற்கு இதுதான் பொருள்.

வாயிலார் இந்தச் சிவவழிபாட்டை நெடுநாட் செய்து அதன் பயனாகிய இன்பத்தை நுகர்ந்து சனனமற்ற அமைதியான வாழ்க்கையிலே சிறந்து விளங்கினார்.

## 5.15 **நாயன்மார்கள் வரலாறு –** *கணநாத நாயனார்*

*நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்*

திருஞான சம்பந்தபெருமான் திருவவதாரம் செய்தருளிய சீர்காழித் திருப்பதியில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் கணநாதர். கணநாதர் என்ற பெயரை அவருக்குத் தாய் தந்தையர் வைத்தார்கள். அது பிற்காலத்தில் அவர் வளர்ந்து பெரியவரான பிறகு பொருள் உடையதாயிற்று. மறையவர் கூட்டத்துக்கு தலைவராக. அவர்கலுக்கு நல்வழி காட்டியாக அவர் விளங்கினார்.

அவர் தம் மரபுக்கு ஏற்ற ஒழுக்கத்தில் சிறந்து நின்றார். சீர்காழியில் எழுந்தருளியிருக்கும் தோணியப்பர் திருக்கோயிலுக்குச் சென்று வழிப்பட்டுப் பல வகையான தொண்டுகளைச் செய்து வந்தார். திருக்கோயில், நந்தவனம், தீர்த்தம் ஆகியவற்றைச் செப்பஞ் செய்தும் பாதுகாத்தும் சிறப்பாக விளங்கச் செய்தும் வருவதையே தம் வாழ்நாட் பணியாகக் கொண்டார்.

இவ்வாறு செய்து வந்தவர் திருத்தொண்டு செய்ய விரும்பி வந்தவர்களை அவரவர்க்கு ஏற்ற தொண்டு செய்யும் வழியில் பயிற்சி தந்து நிறுத்தினார். நந்தவனப் பணி செய்ப்வர்களுக்கு எவ்வாறு செடிகொடிகளைப் பாதுகாத்து வளர்ப்பது என்பதைக் கற்று தந்தார். மலரைக் கொய்யும் முறையைச் சிலருக்குக் கற்பித்தார். வேற சிலருக்கு அம்மலர்களை மாலையாகக் கட்டும் கலையைப் பயிற்றினார்.திருமஞ்சனப் பணி செய்பவர், இரவும் பகலும் ஆலயத்தில் திருவலகிடுபவர், மெழுகுபவர், திருவிளக்கு எரிப்பவர், திருமுறைகளை எழுதுபவர், அவற்றை ஓதுவார் ஆகிய பலவகைத் தொண்டர்களுக்கும் என்ன என்ன ஆக வேண்டுமோ அவற்றைக் கவனித்துச் செய்ய ஊக்கம் உண்டாக்கினார். இதனால் அவரைச் சுற்றி எப்போதும் தொண்டர் கூட்டம் இருந்துகொண்டே இருந்து வந்தது. அந்த கணத்துக்கு நடுவில் தலைவராக நாதராக, கணநாத நாயனார் விளங்கினார். இல்லறத்தில் வழுவாது நின்று சிவத்தொண்டில் ஊற்றம் பெற்று தொண்டு புரிபவர்களுக்கு ஆதரவும் ஆக்கமும் அளித்து யாவரும் நன்கு மதிக்க வாழ்ந்தார் நாயனார்.

திருஞான சம்பந்தரிடத்தில் அவருக்கு அளவற்ற பக்தி உண்டாயிற்று அவர் திருவடியைத் தொழுது மூன்று போதும் அருச்சனை செய்து வந்தார். தொண்டருக்குத் தொண்டராகியும், தொண்டருக்கு நாதராகியும், ஞானசம்பந்தர் பக்தராகியும் வாழ்ந்த இப்பெருமான் சிவபெருமான் திருவருளால் திருக்கயிலையை அடைந்து கணநாதராகும் பதவிப் பெற்றுச் சிறப்படைந்தார்.

முற்றும்




www.shaivam.org